# ஆனந்த ருத்திரேசுவரர்
# பதிற்றுப்பத்தந்தாதி

ப. ஏலவார்குழலி,
சுவடி இயல் மாணவர்,

சுவடி இயல் முதுகலைப் பட்டயத்திற்காக
அளிக்கப் பெறும் சுவடிப் பதிப்பாய்வேடு.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
மார்ச் - 1992

உ. த. நி.
என்............
நூலகம்



ஆனந்த ருத்திரேஸ்வரர் ஆலயம்.

REFERENCE

# ஆனந்த ருத்திரேசுவரர் பதிற்றுப்பத்தந்தாதி

ப. ஏலவார்குழலி,
சுவடி இயல் மாணவர்,

சுவடி இயல் முதுகலைப் பட்டயத்திற்காக
அளிக்கப் பெறும் சுவடிப் பதிப்பாய்வேடு.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
மார்ச் - 1992

டாக்டர் பூ. சுப்பிரமணியம், எம். ஏ., பிஎச். டி.,

சுவடியியல் துறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

## மேற்பார்வையாளர் சான்றிதழ்

'ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் பொருளில் திருமதி. ப. ஏலவார்குழலி, எம்.ஏ., அவர்கள் செய்துள்ள இப்பதிப்பாய்வு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பட்ட மேற்படிப்புச் சான்றிதழுக்காக, இவரால் தன்னியல்பாகச் செய்யப்பட்டது. என்றும், இந்த ஆய்வின் மீது இவருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கவில்லை என்றும் சான்று அளிக்கிறேன்.

சென்னை: 600 113

நாள்: 28.2.'92.

(மேற்பார்வையாளர்)

திருமதி ப. ஏலவார்குழலி, எம்.ஏ.,

சுவடியியல் மாணவி,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

## ஆய்வாளர் உறுதிமொழி

'ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் இந்நூல் சுவடியியல் பட்டயச் சான்றிதழுக்காகப் பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பாய்வேடு என்னுடைய சொந்த முயற்சியால் உருவானது. இதற்குமுன் எந்த ஆராய்ச்சி பட்டத்திற்கும் இப்பதிப்பாய்வேடு அளிக்கப் பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

சென்னை: 600113

நாள்: .2.'92.

(ப. ஏலவார்குழலி).

## நன்றியுரை

சுவடியியல் பயிற்சி வகுப்பில் என்னையும் ஒருவராகத் தேர்ந்தெடுத்து "ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப் பத்தந்தாதி" என்னும் ஆய்வேட்டை அளிக்கும் முயற்சியில் ஈடுபடுத்தி ஆதரவளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொறுப்பு) பெருந்தகை டாக்டர் அன்னிதாமசு அவர்களுக்கு என் பணிவார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன்

சுவடிகளைப் பாதுகாக்கவும் படியெடுக்கவும் சுவடிகளைப் பதிப்பிப்பதன் மூலம் பெறப்படும் பயன்களையும் கருதி இக்கல்வி தொடங்கப் பட்டது.

இக்கல்வியின் இறுதிக் கட்டமாக உள்ள தேர்வுடன் இதுவரை பதிப்பிக்கப் பெறாத ஒரு சுவடியைப் பதிப்புக்குக் கொண்டுவரல் என்ற முறைப்படி ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' என்ற நூலைப் பதிப்பிப்பதில் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

எல்லா நிலைகளிலும் ஊக்கம் அளித்து வருகின்ற எமது ஆசிரியர்களான முனைவர் பு. சுப்பிரமணியம், முனைவர் டி. மகாலட்சுமி, முனைவர் சீ. சசிவல்லி ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துப் பெருமகிழ்ச்சியுறுகிறேன்.

சுவடிதந்து படியெடுக்க உதவிய சென்னை அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகப் பாதுகாவலருக்கும் மற்றும் நூலகத்தில் உதவிய அனைவருக்கும் நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளேன்.

களப்பணியின் போது எனக்குப் பேருதவி நல்கிய காஞ்சி சிவனடியார் திருக்கூட்ட சைவ பெருந்தகைகள் திரு. ஏகாம்பர வாத்தியார், திரு. அருணாசல முதலியார், திரு. குமார் ஆகியோருக்கும் என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆனந்த ருத்திரேஸ்வரர் ஆலய நந்தவனம்.

## சுருக்க குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| உரை. | .. | உரையாசிரியர் |
| தொல். | .. | தொல்காப்பியம் |
| தொல்-பொருள். | .. | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| நூற். | .. | நூற்பா |
| ப. | .. | பக்கம் |
| பக். | .. | பக்கங்கள் |
| பதி. | .. | பதிப்பாசிரியர் |
| பா. எண் | .. | பாடல் எண் |
| பா. | .. | பாடல் |
| . | .. | . |
| . | .. | . |
| . | .. | . |
| . | .. | . |
| . | .. | . |

## முன்னுரை

தமிழுலகில் இன்று வரை பதிப்பிக்கப்பட்ட நூல்கள் சில; பதிப்பிக்கப்பட வேண்டிய நூல்கள் பல. எந்தத் தமிழ் நூலாயினும் அது வெளிவர வேண்டும் என்ற கொள்கையுடையவர்கள் நம் பதிப்பாசிரியர்கள். நூல்களைப் பதிப்பதே ஒருவகை ஆராய்ச்சியாகும். யாமறிந்த வரை திருக்குறளுக்கு முதற்பதிப்பு, கி.பி. 1811இல் அம்பல வாணக் கவிராயரால் செய்யப்பட்ட போதே, இவ்வாராய்ச்சி தொடங்கிவிட்டது எனலாம். அதனையடுத்துத் தொடர்ந்து பல இலக்கிய, இலக்கண நூல்கள் பதிப்பிக்கப்பட்டன.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை வெளியீடான தமிழாய்வின் முதல் தொகுதியிலிருந்து "அச்சில் வாரா அருந்தமிழ் நூல்கள்" என்னும் தலைப்பில் அச்சில் வாராத நூல்கள் தொடர்ந்து அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. இதைப் போன்றே டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையமும் திங்கள் தோறும் அச்சில் வராத நூல்களை ஒவ்வொன்றாக அறிமுகப் படுத்தி வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாரால் கி.பி. 1979-இல் முதன் முதலாகச் சுவடியியல் படிப்புத் தொடங்கப்பெற்றது. சுவடியியல் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவ, மாணவியரும் அச்சில் வாரா நூல்களுள் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் திட்டத்தின் விளைவினால் 'ஆவந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் இப்பதிப்பாய்வேடு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வந்தாதி இலக்கியங்கள் இடைக்காலத்தில் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக அமைகின்றது.

## பதிப்புரை

'ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் இந்நூல் கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்டது. இது கீழ்த்திசை நூலகத்திலிருந்து படியெடுக்கப்பட்டது. மேலும் இதில் எண்பத்தொன்பது பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. மீதமுள்ள 11 பாடல்கள் அழிந்து விட்டன.

### சுவடியின் அமைப்பு

சுவடி நன்றாக உள்ளது. 14 செ.மீ. நீளமும் 2.5 செ.மீ. அகலமும் உடையது. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. ஆனால் தவறுகள் காணப்படுகின்றன. மொத்தம் 89 பாடல்கள் உள்ளன. தமிழிலேயே எண்ணிடப்பட்டுள்ளன. சுவடியின் நடுவில் ஆங்காங்கே உடைந்து காணப்படுகிறது. பழமையானது.

### எண்கள்

இச்சுவடிக்கென தனி எண்கள் ஏதும் இல்லை. அக்காலத்தில் கூறப்படும் தமிழ் எண்கள் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த எண்கள் பாடல்களின் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

### எழுதப்பட்ட முறை

குறில் நெடில் வேறுபாடு இல்லாமல் எழுதப்பெற்றுள்ளது. இரட்டை கொம்பு பயன்படுத்த வேண்டிய இடத்தில் ஒற்றைக் கொம்பு அமைந்துள்ளது. புள்ளிப் பெற்றுக் காணப்படுவதால் சிறிது பிற்காலத்திலேயே எழுதப்பெற்றுள்ளது எனலாம். ல,ள வித்தியாசம், ற, ர வித்தியாசம் இல்லாமல் எழுதப் பெற்றுள்ளது.

## யாப்பமைதி

சுவடி செய்யுள் நடையில் அமைந்துள்ளது. ஆனால் பாடல்கள் அசை, சீர், அடி என்று பிரித்து இல்லாமல் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. செய்யுள் அந்தாதி என்பதால் பாடலைப் பிரித்து எழுத வசதியாக இருந்தது. மேலும் அசை, சீர், அடிகளைப் பிரித்து எழுதியுள்ளேன். பாடல்கள் நினைவில் கொள்ளத்தக்கவாறு அந்தாதி அடிப்படையில் அமைந்துள்ளது.

## நூற் தலைப்பு

நான் எடுத்துக் கொண்ட தலைப்பு 'அனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் இந்நூல் பாடப்பெற்ற தலம் காஞ்சி மாநகரமாகும். மேலும் நூலின் கதாநாயகன் சிவபெருமானே பாட பெற்றுள்ளது மிகவும் பொருத்தமாக உள்ளது. அழகிய புராண செய்திகளைப் பொருத்தி அமைத்துள்ள விதம் போற்றத்தக்கதாக உள்ளது. இவ்வாறாக பல விதத்திலும் சிறந்து விளங்கும் இந்நூல் என்னை ஆய்விற்கு உட்படுத்தியது. என்னைப் பொருத்த மட்டில் இந்நூலில் 11 பாடல்கள் இல்லாத குறையைத் தவிர வேறு குறை இல்லை எனலாம்.

இச் சுவடியில் மூலம் மட்டுமே இருந்தது. என் முயற்சியால் பொருள் எழுதி சேர்க்கப்பட்டுள்ளது.

## சிற்றிலக்கிய வளர்ச்சி

தமிழில் அமைந்த இலக்கிய வகைகள் பலவாக விரிந்து வளர்ச்சி பெற்றுள்ளன. பாவகையாலும் எண்ணிக்கை, அமைப்பாலும் பொருண்மை நிலையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட வகையில் ஒன்றிலிருந்து ஒன்றாகக் கிளைத்து எண்ணிக்கை வகையில் மிகுதியாக இலக்கிய வகைகள் பெற்றுள்ளன.

தொல்காப்பிய கால இலக்கிய வகைகள் காலந்தோறும் தேவைக்கும் கவிஞரின் கற்பனைக்கும் ஏற்பத் தோன்றும் இயல்புடைய இலக்கியங்களை எந்த இலக்கணச் சட்டமும் கட்டுப்படுத்த இயலாது. எனவேதான் இலக்கியம் கண்டதற்கேற்ப இலக்கணம் இயம்புதல் என்ற நெறி எழுந்துள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகப்பொருளும் புறப்பொருளும் என இரு வகைப் பொருளிலக்கணப் பகுதிகள் உணர்த்தப்படுகின்றன. பிற்காலத்தில் அகப்பொருண்மை புறப்பொருண்மை ஆகியவற்றை விரித்தும் பெருக்கியும் கூறும் வகையில் தனித்தனி இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. அகப்பொருள் இலக்கணத்தை விரித்துக் கூறும் வகையில் எழுந்த நாற்கவிராச நம்பியின் அகப்பொருளும் புறப்பொருள் இலக்கணத்தை விரித்துக்கூறும் வகையில் ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பா மாலையும் விரிந்தெழுந்த பிற்கால இலக்கண நூல்களில் குறிப்பிடத்தக்கவை.

தமிழில் அமைந்த இலக்கிய வகைகளில் பல, இவ்விலக்கண நூல்களில் கூறப்படும் வித்துகளைக் கொண்டே வளர்ச்சி பெற்றுள்ளன. புறப் பொருண்மையில் திணை தழுவியும் துறை தழுவியும் அகப்பொருண்மையில் திணைதழுவியும் துறை தழுவியும் வளர்ந்த இலக்கிய வகைகள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

## புறத்திணை இலக்கியங்கள்

வெட்சி முதலாக எழுவகைப் புறத்திணைகளைத் தொல்காப்பியர் கூறுவர். பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய புறப்பொருள் இலக்கண நூல்கள் தொல்காப்பியர் அடக்கிக் கூறிய சிலவற்றை விரித்தும், தொல்காப்பியர் கூறாத புதிய திணைவகைகளைக் கூட்டியும் புறத்திணைகளைப் பன்னிரண்டு எனக் கூறுகின்றன.

வெட்சித்திணைப் பொருண்மையை விளக்கி வருவதாக வீர வெட்சிமாலை என்னும் இலக்கிய வகையும், கரந்தைத் திணைச் செய்திகளைக் கருவாகக் கொண்டு வெற்றிக் கரந்தை மஞ்சரி என்னும் இலக்கிய வகையும் எழுந்தன. வஞ்சித் திணைப் பொருண்மையைக் கருவாகக் கொண்டு வளர்ந்த இலக்கிய வகை போக்கெழு வஞ்சி என்பது 'எதிருன்றல் காஞ்சி' என்ற பொருண்மையை விளக்கும் நிலையில் காஞ்சித் திணைப் பற்றிய இலக்கியமாகக் 'காஞ்சிமாலை' எழுந்துள்ளது.

## புறத்துறை இலக்கியங்கள்

புறத்திணைகளுக்குரிய துறைகளைக் கருவாகக் கொண்டு எழுந்த இலக்கிய வகைகள் பல பாட்டியல் நூல்களில் எழுந்துள்ளன. பாடாண் திணைக்குரிய 'காலம் கண்ணிய ஓம்படை' என்பதைக் கருவாகக் கொண்டு சாதகம் என்னும் இலக்கிய வகையும் 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்பதைக் கருவாகக் கொண்டு பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வகையும் வளர்ச்சிப் பெற்றுள்ளன.

தும்பைத்திணையில் வரும் களிறெறிந்த எதிர்ந்தோர் பாடு களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலை என்ற துறைகளும் வாகைத் திணையில் வரும் முன்தேர்க்குரவை, பின்தேர்க் குரவை என்ற துறைகளும் பரணி என்னும் இலக்கிய வகை வளர்ச்சிக்குப் பாடு பொருளாக அமைந்துள்ளன.

தும்பைத் திணையில் வரும் தானைநிலை என்னும் புறத்துறை தானை மாலை என்னும் பெயருடைய இலக்கிய வகையின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. வஞ்சித் திணையின் துறைகளில் ஒன்றாக வரும் வயல்கள் எய்திய பெருமை என்னும் துறை வரலாற்று வஞ்சி என்னும் இலக்கிய வகையின் வளர்ச்சிக்கு மூலமாக உள்ளது.

'உயிரொடு தோற்றமும் உரித்தென மொழிப' எனவரும் பாடாண் திணைத் துறையைக் கருவாகக் கொண்டு வளர்ச்சி பெற்றதே உலா இலக்கியம். அதுபோல் கூத்தரும் பாணரும் ... சொன்ன பக்கமும் என்ற பாடாண் திணைத் துறைப் பகுதியே ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகையை வளர்த்தது.

இங்ஙனம் புறப்பொருள் இலக்கண நூல்களில் காணப்படும் புறத்திணைகளையும் புறத்துறைகளையும் கருவாகக் கொண்டு பல இலக்கிய வகைகள் வளர்ச்சியுற்றன என்பதைப் பாட்டியல் நூல்களில் அறிகின்றோம்.

## அகத்துறை இலக்கியங்கள்

அகத்துறைகளாக அகப்பொருள் இலக்கண நூல்களில் கூறப்பெறுவன எற்றையும் கருவாகக் கொண்டு பல இலக்கிய வகைகள் எழுந்துள்ளன.

'கனவும் உரித்தால் அவ்விடத்தான' எனவரும் பொருளியல் நூற்பாப் பொருண்மையும் பாங்கனொடு கழறல் என்னும் அகப்பொருள் துறையும் இணைந்த நிலையில் அநுராக மாலை என்னும் இலக்கிய உருப்பெற்று வளர்ந்தது. கனவுக் காலத்துக்கு உரியதாகத் தொல்காப்பியர் கூறும் நன்னயம் உரைத்தல் என்னும் துறைப்பொருண்மையைக் கருவாகக் கொண்டு வளர்ந்த இலக்கியம் புகழ்ச்சிமாலை என்னும் பெயருடையது.

தொல்காப்பியர் குறிப்பிடும் வேள்வி என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு வேள்வி மாலை என்னும் இலக்கிய வகை எழுந்து வளர்ந்தது.

மகளிரின் கற்புடைமைச் சிறப்பை விளக்கும் அகப் பொருண்மையைக் கருவாகக் கொண்டு எழுந்து வளர்ந்தது மங்கல வள்ளை என்னும் இலக்கிய வகை. தலைவன் தலைவியிடத்தும், தலைவி தலைவனிடத்தும் தூது விடும் அகப் பொருண்மை பற்றிய செய்திகளை அகத்திணையியல் களவியல் ஆகியவற்றில் காணலாம். இவற்றைக் கொண்டு தூது என்னும் இலக்கிய வகை எழுந்து வளர்ந்தது.

இங்ஙனம் அகத்திணை, அகத்துறைகள், அகப்பொருண்மைகள் ஆகியவற்றைக் கொண்டு எழுந்து வளர்ந்தனவாகப் பத்தொன்பது இலக்கிய வகைகளைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

## அந்தாதி இலக்கணம்

செய்யுளுக்குரிய வனப்பு எட்டனுள் விருந்து என்பதும் ஒன்று.

"விருந்தே தானும்புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் விளக்கப்பட்டுள்ளது. புதுவது கிளத்தல் என்பதற்கு உரை எழுதிய பேராசிரியர்,

> புதுவது கிளந்தயாப்பின் மேற்றென்னை யெனின்,
> புதிதாகத் தாம் வேண்டியவற்றாற் பல செய்யுளும்
> தொடர்ந்து வரச் செய்வதும் அது முத்தொள்ளாயிரம்
> பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச்
> செய்யுளுமென உரைக் கலம்பகம் முதலாயினவும்
> என்று கூறுகின்றார்.

அந்தாதி என்னும் இவ்விலக்கிய மரபு பற்றி, கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் பின்வருமாறு இலக்கணம் கூறுகின்றனர்

"செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே"

– தண்டியலங்காரம்

"அந்த முதலாத் தொடுப்ப தந்தாதி"

"அசையினும் சீரினும் அடிதொறும் இறுதியை
முத்தா இசைப்பின் அஃதந்தாதித் தொடையே"

"பத்தாதி நூலந்தம் பல்சந்த மாலையாம்
ஒத்தாய வெண்பா ஒருநூறு – ஒத்தசீர்
அந்தாதி யாகும், கலித்துறையும் அவ்வகையே
வந்தால் அதன்பேர் அவை"

– காரிகை

எனவே அந்தாதி என்றால் நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சொல், சீர், அடி இவற்றுள் ஒன்று அதற்கு அடுத்த பாடலின் இறுதியும், முதற்பாடலின் முதலும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலை போல் தொடுத்து முடிப்பது அந்தாதி எனப்படும். இதனைச் சொற்றொடர் நிலை என்று கூறுவர். ஒரு செய்யுளிலேயே ஓர் அடியின் இறுதி மற்ற அடிக்கு முதலாக அமையும்படி தொகுப்பதும் உண்டு. அஃது அந்தாதித் தொடை என்று கூறப்படும். ஒரு பாட்டினுள்ளேயே அந்தாதித் தொடை அமைந்த தனி அந்தாதிப்பாடல்களும் உள.

முப்பது உடனெடுத்து மூங்கிலை மேலே,
மூங்கிலை மேலே தூங்கும் பனிநீரே

என்பது அத்தகைய தனி அந்தாதிப் பாட்டு.

அந்தாதி அந்தத்தை ஆதியாக உடையது. வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. "அந்த ஆதி" என்று பிரிக்க வடமொழித் தொடராதலின் அந்தாதி எனத் தீர்க்க சந்தியாக புணர்ந்தது என விளக்கம் கூறுவர்.

எனவே முன்னின்ற செய்யுளின் ஈற்றடியின் எழுத்தோ அசையோ சீரோ, அடியோ அடுத்து வரும். செய்யுளின் முதலாக வரும் அடியின் முதலாக வரும் அடியின் முதலாக மண்டலித்து முடியப்பெறுகின்ற அழகுடைய இலக்கியமே அந்தாதி இலக்கியமாகும்.

இச் சிற்றிலக்கியம் பல்வேறு சந்தங்களையும் கொண்டு, பல்வேறு பாக்களையும் அடிப்படையாகக் கொண்டு வருகின்றது எனலாம். அச்சீர் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகக் கலிப்பா, எழுசீர் ஆசிரிய விருத்தம், கலித்துறை, எண்சீர் ஆசிரிய விருத்தம் முதலான இன்னும் பிற செய்யுள் நிலைகளைக் கொண்டும் அந்தாதி இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன.

## அந்தாதிப் பகுப்பு

வெண்பா அந்தாதி, கலித்துறை, அந்தாதி ஒரு வகை ஓசைக்குப் பத்தாகப் பத்துவகை ஓசையில் பலவகை விருத்தங்களாயும் பாடப்படும் பதிற்றுப் பத்தந்தாதி வண்ணமும் கலைவைப்பும் தவறாமல் பதினாறுகலைவைப்பும் ஒரே பாடலில் அமைத்து அப்படி முப்பது பாடல் அந்தாதியாக இயற்றும் ஒலியந்தாதி, அவ்வாறே முப்பத்திரண்டு கலைவைப்பும் ஒரே பாடலில் அமைத்து முப்பது பாடல் அந்தாதியாக, கலியந்தாதி அடிதோறும் முச்சீர் மடக்காக வரும் யமக அந்தாதி திரிபு அந்தாதி, உதட்டோடு உதடு படாமல் பாடக் கூடிய நிரோட்டயமக அந்தாதி என்றிவ்வாறு பல்வகையாலும் அந்தாதிகள் விரிவு பெற்றுப் பல்வேறு அந்தாதி வகையினவாகப் பிரிந்துள்ளன.

## இலக்கியச் சிறப்பு

நம் தமிழ் மொழிக்குச் சிறப்புருவமும், சீர் திறமும் தந்த இலக்கியம் யாக்கப்புகுந்த இலக்கிய கர்த்தாக்கள் காலத்திற்கு ஏற்பத் தம் கற்பனை எழுச்சிக்கேற்ப, தம் தங்கருத்தைக் கூறிச் செல்கின்றனர். அந்த நிலையில்,

வெண்பா, விருத்தப்பா போன்ற சில பாவகைகளையே கொண்டு பேரிலக்கியங்கள் யாத்த பெரும்புலவர்கள் பலரைத் தமிழ் உலகில் காண்கின்றோம்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
செயங்கொண்டான் விருத்தமெனும்
ஒண்பாவிற் இயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் இரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாக உயர்சந்தம் படிக்காச
வாதொருவர் பகரொணாதே"

என்ற பாவின் மூலம் மேற்கண்ட கருத்து தெளிவு பெறும்.

அந்தாதி இலக்கியங்களுள் பல்வேறு சமயங்களும் இடம் பெறுகின்றன வெனினும் சைவமும் வைணவமுமே அவற்றுள் தலைதூக்கி நிற்கின்றன. தமிழர் மாண்பு என்ற நிலையில் சைவம் ஏனைய சமயத்தை விடச்சிறிது மேம்பட்டு நிற்கும்போது, சைவ சமயக் கருத்துச் சிறப்பும், வழிபாட்டுச் சிறப்பும் பழமையும் இவைபோன்ற பிறவும் ஏனைச் சமயங்கட்கு வழிகாட்டும் தகையவாக அமைவதை அறியலாம்.

## பிற அந்தாதி நூல்கள்

திருக்கருவை அந்தாதி, திருச் செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அங்காளம்மன் அந்தாதி, அச்சிறு பாக்கம் ஆட்சீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி, அப்பாக்கியதே சிகர் அந்தாதி, அருணகிரி அந்தாதி, அழகர் அந்தாதி, அற்புத திருவந்தாதி ஆருர் மெயித் தேசிகர்மேல் பதிற்றுப்பத்தந்தாதி, ஆவினன்குடி கந்தரந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருஅந்தாதி, ஆசிரியர் வெண்பா அந்தாதி, ஆவினன்குடி அந்தாதி, ஆறெழுத்தந்தாதி என்று இவ்வாறாக இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட அந்தாதிகளைக் காணலாம்.

இதில் நநாற்பதுக்கும் மேற்பட்ட பதிற்றுப்பத்தந்தாதிகளைக் காண முடிகிறது.

ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி

இந்த நூலைக் கச்சி முனிவர் பாடியுள்ளார். இவர் காஞ்சிபுரத்தில் உள்ள ஆனந்த ருத்திரேசர் மீது நிறைந்த பாடல்களைப் பாடியுள்ளார். கச்சியப்ப முனிவர் திருவாடுதுறையின் மகாவித்துவானாகச் சிறப்பு பெற்று வாழ்ந்தவர்.

ஆனந்தி ருத்திரேசவரர் ஆலயம் இக்காலத்தை விட அக்காலத்தில் அதாவது கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவர் காலத்தில் மிகுந்த சிறப்புப் பெற்று விளங்கியிருந்ததைப்பாக்கள் வழியாக அறிய முடிகிறது.

இக்கோயிலில் உள்ள 'சனி பகவான்' சன்னதி திருநெல்லாற்றில் அமைந்துள்ளது போன்று உள்ளதால், இங்கு சனிப்பெயர்ச்சியின் போது அன்பர்கள் திரண்டு வந்து வழிபடுவர்.

மாநகர சிறப்பு

இந்தியாவிலேயே கோயில்கள் அதிகம் பெற்று சிறப்புற்று விளங்குவது தென்னிந்தியாவே ஆகும். அதனுள்ளும் தொண்டை மந்ாடே சிறப்புற்று விளங்குகிறது.

"மாதவம் செய்த தொண்டை நன்னாடு" என்ற சேக்கிழார் வாக்கால் அறியலாம்.

செங்கை அண்ணா, திருவண்ணாமலை சம்புவராயர், வடஆற்காடு அம்பேத்கார் தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களைக் கொண்டது தொண்டை நாடாகும். இங்குச் சான்றோர்கள் மிகுதியாக இருந்தனர் என்பதனைத் "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்னும் ஔவையார் வாக்கால் அறிய முடிகிறது.

# புராண கருத்துக்கள்

கச்சியப்ப முனிவர் பாடியருளிய நூலான ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி சிறந்த செம்மை வளத்துடன் பொலிகின்றது. மேலும் இந்நூலில் பல பாடல்கள் இறைவனின் திருவிளையாடல்களைக் கூறியுள்ளார்.

அதில் ஒன்று திரிபுராதிகள் என்று கூறப்படும் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி ஆவார். இவர்கள் முறையே இரும்பு, பொன், வெள்ளி கோட்டைகளில் வசித்தனர். இவர்கள் சிறந்த சிவ பக்தர்களாக விளங்கினர்.

இவர்கள் தங்கள் கோட்டைகளுடன் அவர்கள் நினைத்த இடத்தில் இறங்குவர். இவ்வாறு இறங்குவதால் அங்குள்ள உயிர்கள் அழிந்து போயின. இதனால் உயிரினங்கள் ஆண்டவனிடம் சென்று முறையிட்டன. வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான் சிவபக்தர்களாக இருப்பவர்களை என்னால் அழிக்க முடியாது என்று கூறிவிட்டார். பிறகு திருமாலும் பிரமனும் திரிபுராதிகளைச் சிவபூசை நீக்கி திசைதிருப்பினர் அதிலும் சுதன்மன், சுசிலன், சபுத்தி என்ற மூவர் மட்டும் தொடர்ந்து சிவனை வழிபட்டனர்.

பிறகு வாசுகியை நாணாகவும் திருமாலை அம்பாகவும் சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும் பெற்று வேதமாகிய நூல் இழுக்க போருக்குச் சென்றார். ஆனால் அவர்தம் சிரிப்பிலேயே திரிபுராதிகளை அழித்தார். அதில் தப்பிய மூவரில் இருவரைத் துவாரபாலகர்களாகவும் ஒருவர் பூதகணங்களின் தலைவனாகவும் இருந்தனர்.

அன்றியும் புரம்பொடிப்ப தனிநகையா லென்பதுமுன்
    பறியாய் கொல்லோ
வொன்றியசீ ரானந்த ருத்திரே சத்தமர்ந்த
    பொருவா கோல
வென்றிவரிச் சிலைவரையும் வீக்குறுநாண் வாசுகியும்
    விளாசெ வம்பு
மன்றல்கமழ் துளவணிந்த மார்பனுமாக் கரந்தேந்தும்
    வயமை யெல்லே.

மற்றொன்று சிவம்பெருமானில் பாதியாக விளங்கும் இறைவி தச்சனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்தாள். சிவபெருமானுக்கே உரியவளாகிய அந்தத் தட்சாயணியைச் சிவபெருமான் உரிய காலம் வந்ததும் கைலாசத்திற்கு அழைத்துச் சென்று விட்டார். இதனால் தனக்குக் கூறாமலே அழைத்துச் சென்று விட்டதை எண்ணி கோபமும் உலகை ஆளும் சிவபெருமான் தனது மருமகன் தானே என்ற கர்வமும் இதனால் தான் உலகில் பெரியவன் என்ற பேராணவமும் கொண்டான். இதனால் சிவனை மதிக்கவும் துதிக்கவும் தவறினான்.

ஒருமுறை யாகம் செய்தபோது முதலில் சிவனுக்குத் தர வேண்டிய மரியாதை தந்து அழைக்காமல் மற்ற தேவர்களையும் பிரமாவையும் விஷ்ணுவை அழைத்து யாகத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

இதனால் கோபம் அடைந்த இறைவனும் இறைவியும் தனது அம்சமாக வீரபத்திரனையும், காளியையும் அனுப்பினர். ஈசன் அம்சமாகிய வீரபத்திரன் தக்சன் தலையைக் கிள்ளி யாகத்தில் எறிந்தான். மேலும் அங்குக் கூடியிருந்த தேவர்களையும் அடித்து நொறுக்கினான். பிரம்மனும் திருமாலும், தப்பித்து ஓடினார். வீரபத்திரனின் கோபத்தால் பற்களை இழந்தான் சூரியன். இதனை "வேழ்வயப் புரவித் திண்டேரிரவி பல்லு குத்தோயென் பாற்"[11] என்ற வரிகளால் குறிப்பிடுகிறார்.

எல்லோரும் அறிந்த தாகிய சிவபெருமான் முடியைப் பாதத்தையும் காண பிரம்மனும், திருமாலும் முயன்ற செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரம்மன் அன்ன உருவத்தைக் கொண்டு சிவபெருமான் முடியைக் காண மேலெழுந்தவாறு சென்றார். திருமால் வராக உருவம் கொண்டு பாதத்தைக் காண பூமியைத் துளைத்துக் கொண்டு சென்றார்.

திருமால் தன்னால் காண முடியவில்லை என்ற உண்மையை வெளிப் படுத்தினார். ஆனால் பிரம்மன் சிவபெருமான் முடியில் இருந்து வந்த தாழம்பூவைத் தனக்காகப் பொய் கூறுமாறு செய்தான். எனவே முடியைப் பார்த்தாகத் தாழம்பு சாட்சி கூறியது. இதனால்கோபமடைந்த சிவபெருமான் பொய் சாட்சி கூறிய தாழம்பூவை முடியில் அணிய மாட்டேன் என்றும் தாழம்பூவின் நறுமணம் ஒழிக என்றும் பிரம்மனுக்கென்று தனியாகக் கோயிலோ வழிபாடோ புவலகில் இல்லாமல் போகட்டும் என்று சபித்தார்.

தாழம்பூவின் நறுமணம் நீங்குக என்று சபித்ததைத் தாங்காது இறைவி. இறைவனிடம் முறையிட்டாள். பிறகு தாழம்பூவின் நறுமணத்தை அதன் மடலுக்கு ஊர்த்தாக்கினார் என்பர்.

காண்பது கருதி மாலுங் கமலனு
நெடிது காலம்
லீண்பட முயன்றா ரென்றால் வினையினேன்
காண்பல் கொல்லோ 3 14

மற்றொன்று, 'தாருக வனத்தில் வசித்து வந்த முனிவர்கள் தெய்வம் எதுவும் இல்லை தாங்கள் செய்யும் நல்வினை தீவினைகளே பலன்களாக அமைகின்றன என்று எண்ணினர். மேலும் நல்வினை செய்தால் நன்மையும் தீவினை செய்தால் தீமையையும் அடைவர் என்று நம்பினர். அதுவே உண்மை என்றும் கூறி வந்தனர். இதனைத் தவிர்க்க வேண்டும் என்று பிரம்மனும் திருமாலும் சிவபெருமானிடம் வேண்டினர்.

இதன் பொருட்டு சிவபெருமான் பிச்சாண்டியாகவும் திருமாலை அழகிய மோகினியாக மாற்றி தாருகா வனம் சென்றனர்.

மோகினி அவதாரம் கொண்ட திருமால் யாகம் செய்து கொண்டிருந்த முனிவர்களிடம் சென்றார். முனிவர்கள் திருமாலின் அழகைக் கண்டு தன் செயல் களைக் கண்டு மயங்கி மோகினியாகிய திருமாலைப் பின்தொடர்ந்து சென்றனர்.

பிச்சாண்டியாகிய சிவபெருமான் முனிவர்களின் மனைவிகள் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று பிச்சையிடுமாறு கூறினார். அவர் அழகைக் கண்டு முனிவர்களின் மனைவியர் பாத்திரத்தில் பிச்சையிடும் போது கை வளையல்கள் கழன்று விழுந்தன என்பர்.

பிறகு சுய நிலைமைக்குத் திரும்பிய முனிவர்கள் மிகுந்த கோபம் அடைந்தனர். பிறகு சிவபெருமானை அழிக்க மழுவை அனுப்பினர். அதைக் கையில் ஏந்திக் கொண்டார் அர்வத்தைக் கழுத்தில் ஆபரணமாக அணிந்து கொண்டார். புலியைத் தோலாகக் கிழித்து ஆடையாக அணிந்து கொண்டார். பிறகு தோல்வியை அடைந்த தாருகாவன முனிவர்கள் தமக்குமே ஒரு சக்தி உள்ளது என்பதை உணர்ந்தனர். பிறகு சிவபெருமான் மோகினியாகிய திருமாலை மணந்து தனது மனைவியாக்கிக் கொண்டார் என்பதனை

~~யாக்கி~~

பூரிமுறுக் கவிழ் முண்டகப் பூதமலர்
  பூத்த வுந்தி யனானை
யரிவி ழிப்பொது மகளென வரவழைத் திருந்து
  வர்திருக் கோட்டி
யூரிய தன்மனை யாக்கிய வானந்த ருத்தி
  ரேசத் தண்ணல் 28

இவ்வாறு பாடுகிறார் கச்சியப்ப முனிவர்.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது விநாயகரை முதற்கண் வணங்காமல் கடைந்ததால் ஆலகால விசம் தோன்றியது. அந்த விசத்தைச் சிவபெருமான் உண்டு இறைவியால் தொண்டையில் நிறுத்தி விசத்தின் கருமையிலிருந்து தேவர்களைக் காபாற்றியவன் என்பதை

வெருவுவதேன் வருவினைக்கு யமைநெஞ்சே
  வேலைவிட மிடற்றடக்கி விண்ணோர்கெல்லா 51

இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

பிரமனும் சிவபெருமானும் ஐந்து தலைகளையுடைய உடையவர்களாக இருந்தனர். இதனால் பிரம்மனைச் சிவன் என்று வழிப்பட்டனர். இந்த நிலைமையை மாற்றி வேண்டி வழிப்பட்டார்கொருள் பிரம்மனின் ஒருதலையைக் கிள்ளி

கையில் ஏந்தி கொண்டார். மேலும் திருமால் வராக அவதாரம் பெற்று ஆணவத்துடன் இருந்தபோது சூலத்தினால் அழுத்தி அவதாரத்தினின்றும் நீக்கினார். இதனை,

அழுத்தினான் சூலத்தினேடு மாலரக்கை யரிந்தேற்றந்த்
மலர்த்தவிசிற் கிழவன் சென்னி -60

என்ற தொடரால் அறியலாம்

குருபகவானுடைய பன்னிரண்டு மகளைச் சந்திரன் திருமணம் செய்து கொண்டான். ஆனால் அதில் ஒருவரை மட்டும் மிகுந்த அன்புடன் கவனித்தான் அதையறிந்த மற்றவர்கள் தனது தந்தையான குருபகவானிடம் சென்று முறையிட்டனர். இதையறிந்த குருபகவான் சந்திரனுக்கு நாளுக்கு நாள் தேயும் சாபத்தைக் கொடுத்தார். அத்தகைய சந்திரனுக்கு அபயம் அளித்து. சிவபெருமான் சந்திரனைத் தனது முடியில் அணிந்து கொண்டார்.

சிளம்பூவ தென்றுள தேழை நெஞ்சே
மெய்ம்மையிற் கோட்டு குருபிழைத்த
விளம் பிறை வேணியின் மாலரக் கற்கின்ன
ருடந்த வேகம் பவானன் -79

என்று வரிகளால் எடுத்துரைக்கின்றார்.

வீரபத்திரனை அவதரித்துப் பின் தனது வியர்வை வடித்து கடலில் விட்டார் அவனே சலந்தரன். இவன் பூவுலகை வாயாக மடித்து உறங்கினான் மேலும் திருமால், பிரம்மன் முதலான உலகங்களை வென்று கைலாசம் சென்றான். இதனை அறிந்த சிவபெருமான் வேதியனாக வேடம் பூண்டு சலந்தரன் வழியில் வந்தார் பிறகு "நீ கைலாசத்திற்குப் போகும் முன்பு நான் போடும் வட்டத்திற்குள் சென்று பின் செல்வாயாக" என்று கூறி ஒரு வட்டம் வரைந்து


சனி பகவான்

அதில் சலந்தரனைச் செல்ல செய்தார். சலந்தரன் அவ்வட்டத்திற்குள் சென்றபின் அது சக்கரமாக மாறி ஜலந்தரனை அழித்தது. அத்தகைய சக்கரத்தைத் திருமாலுக்கு அளித்த சிவபெருமான்.

> புவனலூர் தீவிழிக்குச் சலந்தரனுடலம்
> போழ்ந்த திகிரியளித்தவர் --87

என்று பாடுகிறார்.

இவ்வாறாகு பல புராண செய்திகளைப் புகுத்தி அழகிய, மணியான பாடல்களை அருளி செய்துள்ளார் கச்சியப்ப முனிவர்.

விநாயகப் பெருமான்.



செங்கை அண்ணா, திருவண்ணாமலை சம்புவராயர், வடஆற்பாடு அம்பேத்கார் தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களைக் கொண்டது தொண்டை நாடாகும். இங்குச் சான்றோர்கள் மிகுதியாக இருந்தனர் என்பதனைத் "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்னும் ஔவையார் வாக்கால் அறிய முடிகிறது.

## காஞ்சிபுரத்தின் சிறப்பு

காஞ்சியும் திருத்தணியும் தொண்டை நாட்டின் இரு கண்களாக விளங்கக் கூடியப் பெருமை வாய்ந்த நகரங்களாக அமைந்துள்ளன.

இதிலும் காஞ்சிபுரமே முதற்கண் போற்றக்கூடிய பெருமை உடையது.

"உச்சிக்கு மிஞ்சின தெய்வ மில்லை
கச்சிக்கு மிஞ்சின பதியுமில்லை"

என்னும் பழமொழி இதனைத் தெளிவிக்கிறது.

இக் காஞ்சி மாநகரம் பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்களால் ஆட்சி செய்யப் பட்டுள்ளது.[1]

நாயன்மார்களால் தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்கள் 5 ஆகும் காஞ்சிபுரத்தில் உள்ள சிறப்புடை கோயில்களின் எண்ணிக்கை 82 ஆகும்.

தொண்டை நாட்டில் 24 பிரிவுகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் கோட்டம் என்று அழைக்கப்பட்டன. அதில் ஒன்று 'எயில்' ஆகும். எயில் என்பதற்குக் கோட்டை என்று பொருள். அத்தகைய எயிற்கோட்டையில் காஞ்சி மாநகரம் அமைந்துள்ளது.

---

1. வரலாற்று கருத்தரங்கு, நாகசாமி, இரா., பதிப்பாசிரியர் (சென்னை தொல். பொருள் ஆய்வுத்துறை 1917, ப. 41)

காஞ்சியின் எயில் பெருந்தொலைவிலிருந்து காண்பவர்களுக்குத் தோகை மயில் போல இருந்தது என்பர். நகரின் இருபுறமும் இருந்த ஏரிகள் மயிலின் இறகுபோலவும் கோட்டமதிற் சுவர் மயிலின் வயிறு போலவும் கடல் போலும் கருநிறத்தையுடைய திருமாலின் அத்தியூர் அதன் வாய் போலவும் தோற்றமளித்தன. என்று பெருஞ்சித்தனார் கூறுவார்.

"ஏரிரண்டும் சிறகா எயில் வயிறாக்
காருடைய பீலி கடிகாவா - நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சி பொலிவு"

காஞ்சிபுரம் செங்கை அண்ணா மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குகிறது. இதில் அத்தியூர் என்பது சிறிய காஞ்சிபுரம் ஆகும்.

வரலாற்று சிறப்பு

காஞ்சிபுரம் மூர்த்தி, தலம் தீர்த்தம், ஆகிய முச்சிறப்புகளையும் பெற்றுள்ளது. கி.மு. 150-இல் வாழ்ந்த வடமொழி இலக்கண உரையாசிரியரான பதஞ்சலி காலத்தில் காஞ்சிபுரம் புகழ் மிக்க நகரமாய் இருந்துள்ளது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனும் வடமொழி இலக்கியத்தில் சிறந்த கவிஞனுமாகிய காஞ்சி காளிதாசன்.

"பூவைப்படுவது பொறிலாழ் பூவே"

என்று தமிழர் கூறும் முறையிலே

"புஷ்பேசுசாதி புருஷேசு விஷ்ணுவ
நாரேசு ரம்பா நகரேசு காஞ்சி"

என்று காஞ்சியைச் சிறப்பித்துக் கூறியுள்ளான். இதனால் வடமொழி வாணர் காஞ்சிக்கு அக்காலத்திலேயே கொடுத்த உயர்வினை அறியலாம்.

இந்திய நாட்டின் தெய்வத்தன்மை வாய்ந்த நகரங்களின் வடமொழி வாணர் வகுத்தவை ஏழு அவை அயோத்தி (வட) மதுரை, மாயா, (அரித்துவார்) துவாரகை காசி, காஞ்சி, அவந்தி என்பன. இவற்றுள் காசி, காஞ்சி, அவந்தி (போர்பந்தர்) நீங்களாக மற்றைய நான்கு, புராணபுகழ் உடையவையேயன்றி வரலாற்று புகழ் உடையவை அல்ல.

இம் மூன்றினுள்ளும் கூட இப்பாகுபாடு ஏற்பட்ட காலத்தில் அவந்தி சிறிது புகழ் அடைந்திருக்கிறது. ஆனால் அவந்தி வரலாற்றில் நிலைத்த புகழைப் பெறவில்லை. எனவே ஏழு நகரங்களுள் மிகுந்த வரலாற்றுப் புகழ் உடையவை காஞ்சிபுரமும், காசியுமே என்பர்.

காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்கள் சிறிய நகரங்களைப் போன்றே அமைந்துள்ளன. அவை கலைக் கழகங்கள், நிலையங்கள் ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கியுள்ளன. காசி என்றும் காஞ்சியைப் போல எந்த அரசுக்கும் தலை நகராய் இருந்ததில்லை. மேலும் காஞ்சி பிற்காலத்தில் கருநாடகப் போர்களில் ஆங்கிலேயர்களின் காவற் கோட்டையாக விளங்கியுள்ளது இவற்றால் காசியினும் காஞ்சியே வரலாற்றுச் சிறப்புடைய தெனலாம்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கதம்ப நாட்டு மன்னன் மயூரசன்மன் காஞ்சியிலிருந்த "கடிகா" என்ற கல்லூரியில் வடமொழி பயில வந்திருந்தான். இக் கல்லூரியில் அந்தணர்களே ஆசிரியர்களாக இருந்தனர். இங்கு அரசர், அந்தணர் ஆகியோர்களுக்கு மட்டுமே கல்வி கற்பிக்கப்பட்டது. என்பதனைக் காசாக்குடி, வேலூர் பாளையம் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன. காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோவிலில் சில பகுதிகள் இக்கடிகைக்காகவே கட்டப்பட்டன. திருநாவுக்கரசர் "கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகரம்" என்று பாடியுள்ளதும் இங்கு கூறத்தக்கதாகும்.

## காஞ்சிபுரத்தின் பெயர்க்காரணம்

இந்த நகரம் சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி, புத்தகாஞ்சி, ஜைனகாஞ்சி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சிவகாஞ்சி என்பது பெரிய காஞ்சிபுரத்தைச் சார்ந்ததாகவும், விட்டுணு காஞ்சி என்பது சிறிய காஞ்சிபுரத்தைச் சார்ந்ததாகவும் இன்று விளங்குகின்றன. இவ்விரண்டும் காஞ்சி நகர எல்லைக்குட்பட்டுள்ளன. தற்காலத்தில் பௌத்த காஞ்சிக்குரிய இடத்தைக் குறிப்பதாகச் சுட்டிக்காட்ட இயலவில்லை. அப்பகுதி பெரிய காஞ்சி புரத்திலேயே அடங்கி விடுகிறது.

காஞ்சியை அடுத்துள்ள திருபருத்திக்குன்றம் ஜைன காஞ்சியின் அடையாளமாக உள்ளது. அவ்விடத்தில் ஜைனர்களின் கோயில்கள் உள்ளது. அக் கோவிலைச் சுற்றி ஜைனர்களின் இல்லங்கள் இன்றும் உள்ளன.

காஞ்சிபுரம் புண்ணிய யாத்திரை மேற்கொள்பவர்களின் முக்கிய த்தலமாக விளங்குகிறது. இது செங்கை-அண்ணா மாவட்டத்தின் தலைநகராய் உள்ளது.

காஞ்சிபுரத்திற்குக் காஞ்சி, காஞ்சீ, கச்சி, கச்சிபேடு என்ற பெயர்களும் உள்ளன. இந்நகரினை முப்புவனசாரம், காஞ்சி, காமபீடம், தபோமயம், மும்மூர்த்தி வாசம், இந்திர, புசம், இலயசித்தி, பிரமபுரம் விண்டுபுரம், சிவபுரம், சருவ சித்திரம், கன்னிக்காப்பு என்ற பன்னிரு பெயர்களால் காஞ்சி புராணத்தில் கச்சியப்ப முனிவர் சுட்டிகாட்டியுள்ளார். இந்நாளில் காஞ்சிபுரம் என்ற பெயரே அரசு ஆவணங்களில் காணப்படுகிறது.

கச்சி என்பது காஞ்சிபுரத்தின் மரூஉ ஆகும். காஞ்சி என்பது கஞ்சி என வடமொழியில் திரிந்து வழங்கி பின்னர், கஞ்சி என்பது கச்சி எனத் திரிந்தது என்பர்.

காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் மேகலையாம். நிலமகள் தி இடையிலணியும் ஆபரணம் போல காஞ்சி இவ்வுலகில் அமைந்துள்ளதால் இப் பெயர் பெற்றதென்பர்.

காஞ்சி என்னும் சொல்லுக்கு நிலையாமை என்ற பொருளும் உண்டு. மக்கள் வீடுபேறு பெறுவதற்காகப் பல்வேறு நிலையாமைக் கருத்துகளைச் சொல்லும் வழக்கம் காஞ்சித்திணையாகும். அவ்வாறு சொல்லும் சான்றோன்மை யோர் பலர் வாழ்ந்ததால் காஞ்சி என்ற பெயர் பெற்றதென்பர்.

காஞ்சிபுரத்தை க-பிரமன், அஞ்சித்தல் - பூசித்தல், புரம் - நகரம், எனப் பிரித்து நோக்கில், பிரமனால் பூசிக்கப்பட்ட காஞ்சிபுரமாயிற்றென்பர் சிலர்.

இவ்வூர் விட்டுவைப் பூசித்தமையால் விண்டுபுரம் என்றும் இங்குள்ள மக்களுக்கு கலியுகத்திலும் கலியால் துன்பம் நேரிடாதாகையால் கல்சித்து என்றும் வழங்கப்படுகிறது.

ஊழிக்கால முடிவில் திருக்கூடத்து இமலாகையால் இலயசித்து எனவும் உயிரினங்களுக்கு வரும் இடையூகங்களை அகற்றிச் சகல சித்திகளையும் வழங்குவதால் சகல சித்திரம் எனவும் பெயர் பெற்றது.

உமையம்மையார் காஞ்சியில் மெய்த்தவம் செய்ததால் தபோமயம் எனவும், காமாட்சி முப்பத்திரண்டு அறம் செய்து காத்தமையால் கன்னிக்காப்பு என்றும் பெயர் பெற்றது.

சிவபிரான் உமாதேவியின் வழிபாட்டை ஏற்றுக் கொண்டு காட்சி கொடுத்ததனால் சிவபுரம் என்று பெயர் பெற்றது.

காஞ்சி சக்தி பீடங்களில் முதலிடம் பெறுவதால் ஆதிபீடம் எனவும், பிரம்மாயாகம் செய்ததனால் பிரம்மாபுரம் எனவும் பெயர் பெற்றது என்பர்.

காஞ்சி

காஞ்சி என்ற மரம் காஞ்சிபுரத்தில் அகலமாயும் பரந்தும் காணப்படுகிறது. எனவே அதன் நிழல் சூரியன் உதயமாகும் போதும், மேற்கடலில் விழும் போதும், அதனடியிலேயே விழுந்து விடுகிறது. இம்மரத்தின் பெருமையால் காஞ்சிபுரம் தன்நிழல் பிரியாத காஞ்சி' என் பெயர் பெற்றது. இதனைக் கச்சியப்பசி வாசிாரியார் காஞ்சி மாநகருக்குத் 'தன்நிழல் பிரியாத' என்ற அடை கொடுத்து கூறியுள்ளமையால் அறியலாம்.

'புரம்' என்னும் சொல்லுக்கும் ஊர் என்பது பொருளாகிறது. எனவே காஞ்சி மரத்தையுடைய ஊர் காஞ்சிபுரம் ஆகிறது என்பது சிறப்புக்குரியதும், இயறைகையோடு இணைந்த பெயராகவும் விளங்குகிறது. மேற்கூறியவாறு காஞ்சிக்குப் பல பெயர்கள் இருப்பினும் காஞ்சி என்ற மரம் இருந்த காரணத்தால் காஞ்சிபுரம் எனக் கூறப்படுவதே மிகவும் பொருத்தமுடையதாகிறது எனலாம்.

ஆனந்த ருத்திரேசுவரர் எழில் கொஞ்சும் காஞ்சி மாநகரில் அமைந்ததே ஆனந்த ருத்திரேஸ்வரர் ஆலயம். இவ்வாலயத்தில் கச்சியப்பமுனிவர் குறிப்பிடும் ஆனந்த விநாயகர் தட்சிணாமூர்த்தி, சன்னதி, முருகர் வள்ளி தெய்வானை அமர்ந்த சன்னதி, பைரவர், சண்பகவாவி ஆகியோர் சூழ்ந்த சோலைகள் அமைந்த கோயிலாக விளங்குகிறது.

கச்சியப்ப முனிவர்

இவர் ஆனந்த ருத்திரேஸ்வரர் பதிற்றுபத்திற்தாதி பாடியுள்ளார். இவர் காலம் 18-ஆம் நூற்றாண்டாகும். இராட்சுகன் என்று எல்லோராலும் போற்றப் படும் கச்சியப்பமுனிவர். திருவாடுதுறையில் மகா வித்துவானாகச் சிறப்பு பெற்றவர். இவர் சிவஞான முனிவரைக் குருவாகக் கொண்டவர். கச்சியப்ப முனிவரின் மடம் காஞ்சிபுரத்தில் பிள்ளையார் பாளையத்தில் அமைந்துள்ளது.



மூலமும் உரையும்

உ. த். நி.
எண்.............
நூலகம்




ஆனந்த விநாயகர்

## ஆனந்த ருத்திரேசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி

### கடவுள் வாழ்த்து

முந்திமையோர் மதியாமை புரிநெடுங் கடல்கடைய
　　முனிந்து வல்லே
யந்திலமிழ் துயர்ப்பயா தாலாலந் தோற்றியவ
　　ரகத்தைக் காற்றுந்
தந்தையினை கூறிமைத்திட் டுய்ந்துயல் லான்முதன்மை
　　தனக்கே நாட்டு
மைந்தனைவண் காஞ்சிநக ரானந்த விநாயகனை
　　வணக்கஞ் செய்வோம். ..1

#### இதன் பொருள்

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடந்த பொழுது விநாயகரை முதற்கண் வணங்காமலே பாற்கடலைக் கடைய முற்பட்டு பல இடையூறுகளைச் சந்தித்தனர். அத்தகைய முதல்வனாகிய அழகிய காஞ்சி நமாநகரில் எழுந்தருளியுள்ள ஆனந்த விநாயகரை வணங்குவோம்.

### நூல்

மணிபூத்த மலர்த்தடமு மலர்பூத்த விரைப்பொழிலு
　　மருங்கு சூழ்ந்த

வணிபூத்த காஞ்சிநக ரானந்த ருத்திரே
   சத்து வாழும்
பணிபூத்த குறைகழற்றாட் பண்ணவனைப் பணிந்தேத்தும்
   பண்பு மிக்கோர்
பிணிபூத்த பெரும்பிறவிக் கடனின்று மானந்தப்
   பிறங்கல் சேர்வார். ..1

இதன் பொருள்

முத்துக்களை ஒத்த மலர்கள் பூத்திருக்கும் குளமும், மணம் வீசும் மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைகளும் நிறைந்து, அழகே உருவான காஞ்சி மாநகரின்கண் எழுந்தருளியுள்ள ஆனந்தருத்திரேசனை, ஆபரணங்கள் பூட்டப்பட்ட பெருமைமிக்க பாதங்களுடைய இறைவனைப் பணிந்து துதித்து வாழ்கின்ற, நற்குணமுடையோர், நோய், நொடி இன்றிப் பிறவியின் பயனை அடையும் வண்ணம் ஆனந்த வாழ்க்கையைப் பெற்றுப் பெருமை அடைவர்.

சேர்த்தோங்கு மணிக்குறங்கிற் றிதலைமுலைச் சேயரிக்கட்
   டெரிவை பாகங்
கூர்ந்தானை யானந்த ருத்திரே சத்தமர்ந்த
   குலக்குன் றானைச்
சார்ந்தாவி யுடல்பொருளுந் தனக்களித்து பேரின்பத்
   தடத்தன் மூழ்கி
வாழ்ந்தார்கள் வாழ்ந்தார்கள் மற்றையர்கள் வாழ்வெண்ணை
   வாழ்வு மாதோ ..2

<u>இதன் பொருள்</u>

அழகிய வடிவுடைய தொடையும், மார்பகமும் உடைய உமையவளைச் சேர்ந்திருப்பவனை, ஆனந்த ருத்திரேசத்தின்கண் அமர்ந்திருக்கும் நற்குணம் படைத்தவனை, நினைத்து உள்ளம் உருகி, உடல், பொருள், ஆவி யாவற்றையும் அவ்விறைவனுக்கு அளித்துப் பேரின்பம் பெற்றவர்களே வகையான வாழ்வு வாழ்ந்தவர்களாவர். மற்றவர்கள் வாழ்ந்து என்ன பயனும் இல்லை.

மாதர்வடி விளைவாட்கண் வதனநகை முலையல்குன்
மருங்குல் கைகா
லாதியெனத் தெரிந்துளமே மயங்கியயர் கின்றனை
மற்றையக் கேண்மோ
நீதியரு ளானந்த ருத்திரே சத்தமர்ந்த
நிமலர் போற்றி
மேதைமச்சை சுக்கிலமுத் திரமாதி யெனத்தெரிது
விருப்பெங் குன்டே ..3

<u>இதன் பொருள்</u>

அழகிய பெண்கள் புன்முறுவல் பூத்துத், தம் மார்பகம் விம்மி நிற்கக் கூடிய அளவிற்கு, அவ்விறைவனுடைய கை, கால்களே ஆதி எனத் துதித்து

மயங்கி நிற்கின்ற நிலையைப் பாருங்கள். அதற்குக் காரணம் நீதியை அருளக் கூடிய ஆனந்த ருத்திரேசத்தின்கண் அமர்ந்திருக்கும் இறைவனைப் போற்றி நிற்பதே. நிறை அறிவு, மூளை, இந்திரியம் சூத்திரம் ஆதியெனத் தெரிந்து தெளிந்தவர்கள் இறைவனைத் தவிர வேறு எவற்றையும் விரும்பமாட்டார்கள்.

உண்டில்லை யெனுமருங்கு லுமையிடங்கண் டாடிருக்க
   ளுமற்று மூடக்
கண்டொல்லை கழுவாய்க்கு விடைகொடுத்தா னெனிற்காஞ்சி
   நகரில் யார்க்குத்
தொண்டல்கு மானந்த ருத்திரே சத்தமர்ந்த
   தொல்லை வாழ்வை
விண்டல்ல புரிகிற் பார் யாங்குய்த்து பெறுகிற்பார்
   விடைக்கு நெஞ்சே ..4

இதன் பொருள்

உண்டா, இல்லையா என மயங்குமளவிற்கு உடல் ஒத்து உமையவளை இடப்புறமாகக் கொண்டிருக்கும் இறைவனை மெய் மறந்து கண் மூடித் துதிப்பவர்களுக்கு, அவருடைய துன்பங்களைத் துரத்தி நல்வாழ்வு கொடுக்கும் ஆனந்த ருத்திரேசத் தமர்ந்த பெருமானை எப்போதும் நினைப்பவர்க்குத் துன்பமில்லை.

நெஞ்சகமே சீசீநின் குணமென்ன வாணமிழ்ந்த
நேர்ந்துண் டாலா
மஞ்சுறைநிமல் வியெவரு மருவருக்கும் புல்லிகள்
டகலா வாபோன்
மஞ்சனைநல் லானந்த ருத்திரே சத்தமர்ந்த
மணியைக் கண்டு
நஞ்சனைய விழிமடவார் நாற்றவுடல் வெறுத்திலையா
னயக்கின் றாயே ..5

<u>இதன் பொருள்</u>

நெஞ்சமே, நீதவறான பாதையில் செல்லாதே. நஞ்சு போன்ற ஆசைகாட்டி மோசம் செய்யக் கூடிய குணத்தையும் துர்நாற்றம் பொருந்திய உடலையும் கூடிய பெண்டிரை நினைத்து மகிழாதே. அவருக்கும் அச்செயலைத் துறந்திட்டு, மஞ்சனையில் அமர்ந்து அருளக்கூடிய ஆனந்த ருத்திரேசரின் நிறைந்த அழகைக் கண்டு போற்றி நிற்பாயாக.

நயக்குமடி யவர்கோல நாள்வாய நயந்தவர்க
　　ளேவ லாற்றி
பயக்மெரு ளானந்த ருத்திரே சத்தமர்ந்த
　　பகவற் றாழ்ந்து
வியக்குமவன் றிருப்புகழை வாயார விரித்துரைத்து
　　மேவு கற்பிற்
புயக்காதோ வுலகமெனுஞ் சேற்றிடைப்போ யழுந்தியபுல்
　　லறிவை யம்மா ..6

<u>இதன் பொருள்</u>

இறைவனைப் போற்றித் துதித்து நிற்கும் அடியவர்களான பக்தர்களுக்குத் தொண்டுபுரிந்து, ஏவல் செய்து, புகழ்ந்து நிற்பதும், பக்தர்களுக்கு நலம் செய்து அருள்புரியும் ஆனந்த ருத்திரேசத்தமர்ந்த இறைவனைப் போற்றி நிற்பதும், அவ்விறைவனின் திருப்புகழை வாய் மணக்க விரித்துப் புகழ்ந்துரைப்பதும், இவ்வுலகமெனும் அறியாமைச் சேற்றில் அகழ்ந்து, அறிவிலிகளாகாமல் நல்ல நிலையை அடைவதற்கு வழிவகுக்கும்.

அம்மையிற்செய் தீவினையின் பயன்வருவ தறியாமை
யந்தோ வந்தோ
விம்மையிற்செய் நல்வினையி ன் வருவ தெனக்கருதி
யிழுதை யோர்கள்
செம்மையரு ளானந்த ருத்திரே சத்தமர்ந்த
செம்மற் போற்கு
தம்மைவரு பயனிழந்தார் நெஞ்சகமே நீகலங்க
லொழுக்கி வில்லை (7)

இதன் பொருள்

மனமே! முற்பிறவிகளில் செய்த தீ வினையின் பயன்கள் இப்பிறவியில் வரப்போவதை அறியாமல் இந்தப் பிறவியில் நல்வினை செய்ததனால் இன்பம் வருகின்றதென்று தீயவர்கள் எண்ணுகிறார்கள் அருள் புரிகின்ற ஆனந்தருத்திரேசத்துள் அமர்ந்த சிவபெருமானை வணங்காதவர்கள் இனி வரும் பயன்களை இழந்து விடுவார்கள். ஆகையால் நீ கலங்காமல் இறைவனை வணங்கி வாழ்வாயாக.

நிற்குணனை யானந்த ருத்திரே சத்தமர்ந்த
நிலைமை யானை
விற்குணமே யிவாமுகப் பைம்பு ணான் மலப்பிடைக் இடத்தும் விடாச்சென்றனை
நற்குணமுள் ளவரல்லா ரடுத்திருந்தும் வழிபாடு
நன்று வில்லா
வெற்கதிர லர்கமலம் வண்டலது மண்டுக
மெண்ணா தன்றே (8)

இதன்பொருள்

தீய குணமுள்ளவர்கள் அருகிலிருந்தும் இறைவனைக் கண்டு வந்தனை வழிபாடுகள் செய்யமாட்டார்கள். இது சூரியன் ஒளியால் மலரும் தாமரை மலரின் தேனை வண்டுகள் நுகருமே அல்லாது அருகில் இருந்தும் நண்டு முதலியவை நினைத்துப் பார்ப்பது கூட இல்லை என்று கருத்து தோன்ற அமைந்துள்ளது.

அன்றியமுப் பரம்பொடிப்ப தனிநகையா லென்பதுமுன்
பறியாய் கொல்லோ
வொன்றியசீ ரானந்த ருத்திரே சத்தமர்ந்த
வொருவா கோல
வென்றிவரிச் சிலைவரையும் வீக்குறுநாண் வாசுகியும்
விரைசெ லம்பு
மன்றல்கமழ் துளவணிந்த மார்பனுமாக் கரந்தேந்தும்
வயமை யென்னே (9)

இதன் பொருள்

வெற்றி பொருந்திய சிறப்பு மிகுந்த ஆனந்த ருத்தி ரேசத்தில் அமர்ந்த ஒப்பற்றவனே நீ அக்காலத்தில் திரிபுரங்களைப் பொடி செய்தது உன்னுடைய ஒப்பற்ற சிரிப்பில் ஆகும். என்பது தெரிந்து கொள்ளவில்லையோ. ஆனால் நீ வெற்றி பொருந்திய வரி கொண்ட மேரு மலையை வில்லாகவும் அதில் கட்டிய நாண் வாசுகியாகவும் விரைந்து செல்லக் கூடிய அம்பு மணம் வீசும் துளசி மாலையணிந்த மார்பு உடைய திருமாலாகவும் கையில் எடுத்துச் சென்றது என்ன வீரமாகும்.

என்னையுடை யான்றிருமால் முண்டகனிந் திறனிமையோ
   ரெவருஞ் சூழ்ந்து
முன்னிறைஞ்ச மானந்த ருத்திரே சத்தமர்ந்த
   முதல்வ னென்றா
லன்னையனை யாய்க்கறவும் பெருமையே யினியேனு
   மடியா ரெல்லாந்
துன்னுரு ழுவில்யானு முடனுறையக் கடைக்கணியாய்
   சோதி வாழ்வே (10)

இதன் பொருள்

என்னை உடைமையாகப் பெற்றவனும், திருமகளை மார்பிலணிந்த திருமாலும் இந்திரனும், வேர்களும் மற்றவர்களும் சூழ்ந்து வணங்கி போற்றுகின்ற ஆனந்த ருத்திரேசத்தில் அமர்ந்த முதல்வனும் என் அன்னையைப் போன்றவனும் சோதி சொரூபனும் என் வாழ்வாக அமைபவனும் ஆகிய இறைவா. என்னை இனியாகிலும் அடியார்கள் எல்லாம் பொருந்தி இருக்கின்ற சூழலில் நானும் உடன் சேர்ந்து வாழும் பேற்றைக் கடைக் கணித்து அருள வேண்டுகிறேன் அதுவே எனக்குப் பெருமை தரும்.

விசேடக் குறிப்பு

"தொண்டரொடு கூட்டு கண்டாய்" - தாயுமானவர்.

வாழ்வெனும் பருகர்ச் சேறு வயின்வயின்
  முக்க மாழாந்
தாழ்வது தகுமே யன்றே வானந்த
  ருத்தி ரேச
வேழ்வயப் புரவித் திண்டே ரிரவிபல்
  லுகுத்தோ யென்பாற்
காழ்வினைக் கவய னூறிக் கருணையங்
  கவய நல்கே (11)

இதன் பொருள்

ஆனந்த ருத்தி ரேசப் பெருமானே ஏழு குதிரைகள் பூண்ட தேரில் செல்லும் கதிரவனின் பற்களை உகுத்தவரே. வாழ்வாகிய பருகாத சேற்றில் பலதடவை நான் அழுந்தி மூழ்கிக் கெடுவது தக்கது தானா? என்னிடத்தில் உள்ள தீய வினைகளை நீக்கி கருணையாகிய அபயத்தைக் கொடுத்தருள வேண்டுகிறேன்.

நல்லுவ தனைத் தானே யல்லது
  வேறு நல்கா
தல்கிய காஞ்சி மூதூ ரானந்த
  ருத்தி ரேச
பல்கிய வன்பு நீங்காப் பன்பெனக்
  கருள்க வன்றேல்
மெல்குவல் வேறு காணேன் விம்முவ
  னென்செய் கேனே. (12)

இதன் பொருள்

காஞ்சிபுரத்தில் ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் பெருமானே. உம்மை வணங்குகின்றவர்களுக்கு உம்முடைய திருவடிகளைக் கொடுப்பதல்லாது வேறு எதையும் அருளாதவரே. உம்மிடம் நிறைந்த அன்பை நான் செலுத்தும் பண்பை அடைய அருள் செய்ய வேண்டும். எனக்கு அருள் செய்யா விடில் மெலிந்து போவேன். வேறு துணையாரையும் நான் காணேன். அருள் செய்யாவிடில் விம்மி அழுவது தான் என்னால் முடியும்.

செய்யபொன் னுருவா னென்றும் வெண்பொடி
   திமிர்ந்தா னென்று
மையனா யாண்டா னென்று மானந்த
   ருத்தி ரேச
துய்யவே நின்றா னென்று மோதிடப்
   படாதே லெந்தாய்
பொய்யிருள் கழுவி யாரே நின்னடிப்
   போது காண்பார் (15)

இதன் பொருள்

எந்தையே தாங்கள் சிவந்த பொன் போலும் மேனி உடையவர் என்றும், வெண்ணீறு அணிந்தவர் என்றும், தலைவனாக அனைவரையும் ஆண்டவர் என்றும், ஆனந்த ருத்தி ரேசத்தில் இருந்து அருள் பெய்பவர் என்றும், உண்மையைக் கூறி வணங்க வேண்டும். அல்லாமல் பொய்யாகிய சொல்லாலும் பெயலாலும் உம்முடைய திருவடியாகிய தாமரையை எவர் காண்பார்கள்.

காண்பது கருதி மாலுங் கமலனு
   நெடிது காலம்
வீண்பட முயன்றா ரென்றால் வினையினேன்
   காண்பல் கொல்லோ
வான்படு பொழில்சூழ் காஞ்சி யானந்த
   ருத்தி ரேச
மான்படு கருணை தன்னால் வயக்குறு
   நினது பாதம் (14)

இதன் பொருள்

ஆகாயமளவு உயர்ந்த சோலைகள் சூழ்ந்த காஞ்சி மாநகரில் வீற்றிருக்கும் ஆனந்த ருத்திரேச பெருமானே. உம்முடைய திருவடிகளைத் தரிசிக்கும் பொருட்டு திமாலும் பிரமனும் நெடுங்காலம் பெருமுயற்சி செய்கிறார்கள் என்றால் எளியனாகிய நான் எளிதில் காண முடியுமோ. ஆதலால் பெருமை நிறைந்த தங்களுடைய கருணையால் உம்முடைய திருவடிகளை எனக்கு வழங்க வேண்டும்.

பாதகம் பலவுஞ் செய்தேன் பரிந்தொரு
   கழுவாய் நற்றே
வேதமே யியற்றே னின்னு மென்னுவ
   லெங்ஙு னுய்வே

வாதகா தென்று வல்லே யானந்த
   ருத்தி ரேச
நீதடுத் தாள வேண்டு நின்பெருங்
   கருணை நீரால் (15)

<u>இதன் பொருள்</u>

ஆனந்த ருத்திரேச பெருமானே. நான் பல பாதகங்கள் செய்துள்ளேன். இன்னும் தீயவைகளைச் செய்ய எண்ணுகிறேன். இவ்வாறானால் நான் எவ்வாறு பிழைப்பேன். ஆ... ஆ... தகாதவைகளையே செய்வதில் வல்லவனாக இருக்கின்றேனே உம்முடைய பெருமை பொருந்திய கருணையாகிய நீரால் என்னைத் தீயவற்றில் செல்லாமல் தடுத்தாண்டு என்பாவங்களைக் கழுவ வேண்டுகிறேன்.

நீரினை வடத்தை மானை நெருப்பினைப்
   பிறவற் றோடு
மாரினர் முடித்த வேணி யானந்த
   ருத்தி ரேச
மாரிடை யடக்கிக் காத்தும் பயனிலை
   பலவு நேரா
வோருமொன் றனையுந் தானி வறத்திடா
   தொழிந்த காலை (16)

**இதன் பொருள்**

கங்கையினையும், நஞ்சையும் மானையும் அக்கினியினையும் மற்றவைகளோடு திருமுடியில் முடித்த ஆனந்தருத்திரேச பெருமானே. எதையும் ஆராய்ச்சி செய்யும் அறிவில்லாத இழிந்த என்னையும் உம்முடைய திருவடிகளில் சேர்க்காவிட்டால் தாங்கள் இந்த உலகத்தை படைத்தும் அவற்றைக் காப்பாற்றியும் அவற்றை அடக்கியும் ஆகிய முத்தொழில் புரிந்தாலும் பயனே இல்லை.

காலையின் மலநோ யுச்சிக் கடும்பசி
   யுடற்றுந் துன்ப
மாலையிற் காமப் பிணி யிடையிடை
   மற்ற னந்த
மாலையிற் கரும்பு போன்றே னானந்த
   ருத்தி ரேச
மேலைவல் வினையே றாமை விழுத்தகு
   கலப்பு வையே (17)

**இதன் பொருள்**

ஆனந்த ருத்திரேச பெருமானே. நான் காலைப் பொழுதில் மலஜலம் கழித்தலாகிய நோய் நடுப்பகலில் கொடிய பசியில் துன்புறுதல் மாலையிற் காமமாகிய நோயால் வருந்துதல் இவ்வாறு துன்பப்படுகிறேன் தாங்கள் கருணை கூர்ந்து என் முன்வினை அதிகப்படாமல் அழித்துச் விட வேண்டுகிறேன் பூமாலையில் வண்டு சேர்வது போல் உன் திருவடியில் என்னை இணைத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

வையக முழுதுஞ் சூழ்ந்தும் வனம்பல

சரித்தும் பன்னா

மையமேற் றுழன்று மென்னே யானந்த

ருத்தி ரேசன்

செய்யபூங் கழல்கள் காண்டல் செல்லுமோ

சிறிது நோவா

ஐயவா மன்னா னோக்க முறுத்தவ

னாயி னன்றே (18)

இதன் பொருள்

மக்கள் உலகில் பல இடங்களுக்குச் சென்றும் பல காடுகளில் வாழ்ந்தும் பலகாலம் பிச்சை ஏற்று உண்டு துன்பப்பட்டாலும் ஆனந்த ருத்திரேச பெருமான் சிவந்த மலர் போன்ற திருவடிகளைக் காண்பது முடியுமோ முடியாது. ஆனால், சிறிதும் துன்பப்பட்டாமல் இறைவன் திருவடிகளைத் தொடர்ந்து உற்று நோக்கி வந்தேன் ஆயின் நிச்சயமாக நான் உய்ந்து விடுவேன்.

இன்னலே யாக்கை யென்னப் பட்டன

வெலவயு மாகிக்

கன்னது தெரித ராமை யானந்த

ருத்தி ரேசன்

றன்னைநன் றடுத்தும் போக தனுக்களை

யிரத்தி நெஞ்சே

பொன்னடிப் போதே வேண்டத் தக்கது

புகழ்ந்து வேண்டே. (19)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் பெருமானிடம் அன்பு கொண்டு வணங்கி இன்பம் தரும் பிறவியினை இரக்கின்றாய். பிறவியினால் துன்பமே தான் வரும். துன்பங்கள் வருவது நம் உயிருக்குத் தெரியாது. ஆதலால் அவன் திருவடிகளை வணங்கு வேண்டத் தக்கது பிறவியின்றி அவன் திருவடிகளை அடைவதே ஆகும்.

வேண்டுவோர் வேட்ட யாவும் பெற்றுயின்
விழைய நிற்ப
தண்டருள் காஞ்சி மூதூ ரானந்த
ருத்தி ரேசன்
மாண்டகு கமல பாத மற்றது
பெற்றார் பின்றைக்
காண்டகு மனமே வேட்டுக் கவர்பொருள்
வேறொன் றின்றே (20)

இதன் பொருள்

மனமே தம்மை வணங்குகின்றவர்களை ஆண்டு அருள் செய்யும் காஞ்சி மூதூரில் உள்ள ஆனந்த ருத்திரேச பெருமானது பெருமை பொருந்திய பாதமலர்களைப் பெற்ற அடியார்கள் வேறு மாறுபடுகின்ற பொருள்களை விரும்பிக் கேட்க மாட்டார்கள். ஆதலால் அடியார்கள் விரும்பிப் பெற்ற பின்னர் வேறு விருப்பம் அவர்களுக்கு இருக்காது.

இன்று வாழ்குது மென்னவும் வரையிலா
　வுடலி னையெடுத் தேமுக்
கொன்று மானந்த ருத்தி ரேசத்
　தமரெறொ வனைமட நெஞ்சே
மன்றன் மாமல ரான்மலிப் புனனிரான்
　மற்றன் பேரரு ளாலு
நன்று மன்பினால் வழிபட லல்லது
　நாடு வதினி யென்னே (21)

இதன் பொருள்

மடப்பம் பொருந்திய நெஞ்சமே இப்பொழுது இன்பமாக வாழலாம் என்று எண்ணி எண்ணற்ற உடம்புகளை எடுத்து இளைத்து இருக்கின்றீர் ஆனந்த ருத்திரேச பெருமான் அடியார்களுக்கு அருள் செய்பவன் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மாவும் காத்தல் தொழில் புரியும் திருமாலும் மற்றவர்களும் அவன் அருளால் வாழ்கின்றவர்கள். ஆகையால் அவனை அன்பினால் வழிபட்டு அவனோடு ஒன்ற வேண்டும். அஃதல்லாமல் வேறு யோசிப்பது ஒதுவுமில்லை.

என்னை யாண்டருள் புரியென நினைந்தன
　னென்று மவ்வுளத் து டே
யன்னை யாகிய வானந்த ருத்தி
　ரேசத் தமரருளாளன்
முன்னி னேரிடை யானொடும் கனத்தொடும்
　வின்ன வர்த்தொழு தேத்தும்
தன்னை நேர்நட மாடுத றொடங்கினன்
　தகர்ந்த அமலக் கோட்டம். (22)

இதன் பொருள்

பூத கணங்களும் தேவர்களும் தொழுது வணங்கும் தாயினும் சிறந்த ஆனந்த ருத்திரேச பெருமானை நோக்கி என்னை யாண்டருள் செய்ய வேண்டும் என்று என் மனத்தில் எண்ணி வேண்டினேன். எண்ணிய என் உள்ளத்தில் மின்போலும் இடையை உடைய பெருமாட்டியோடு சிறப்பாக நடனமாடுதல் தொடங்கி விட்டார்.

கோட்ட மேபுரி கின்றனை சிதடர்தங்
   கூட்ட மேவிழை கின்றா
யேட்டை தீர்த்திரு மானந்த ருத்தி
   ரேசத் தமரிறை யோன்பா
லாட்டம் யாவதும் வைத்திலை யடியவர்
   நண்ணி யகுழாய் கண்டா
லோட்ட மேபுரி வாய்மன மேயுனக்
   குய்வ கைமொழி கல்லாய் (23)

இதன் பொருள்

மனமே! நீ தீயவற்றையே செய்கின்ற தீயவர்கள் கூட்டத்திலே சேர விரும்புகின்றாய். இவ்வாறன்றி பழைய வினைகளை நீக்கி அருளும் ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் இறைவனிடத்தில் விருப்பம் சிறிதும் வைத்திருக்க வில்லை. அவன் அடியவர்கள் கூட்டத்தைக் கண்டால் கலந்து கொள்ளாமல் ஓடி விடுகின்றாய். உனக்கு எவ்வகையிலும் உய்யும் நெறியைச் சொல்ல முடிய வில்லை.

கல்ல ரத்தமுட் டியநறுங் களங்கமுங்

கதிர்த்த செங்கடைக் காடு

மல்ல ளுக்கிய தவளவெவ் பூதியு

மக்க மாலையுங் கண்டால்

வில்ல முத்திய வானந் தருத்தி

ரேசத்து மெய்பொரு ளென்றே

சொல்ல டித்துணை பணியுளத் ததுவென்

றேதுணி வழியிது வாமால். (24)

இதன் பொருள்

மனமே சிவந்த நிறம் உடைய சிறந்த ஆடையும் சிவந்த சடை முடியாகிய காடும் வெண்மை நிறம் பொருந்திய விபூதியும் உருத்-திராட்ச மாலையும் காண நேரிட்டால் அத்திரு உருவம் வில்லேந்திய ஆனந்த ருத்தி ரேசத்தில் எழுந்தருளி இருக்கும் மெய்பொருளாகிய இறைவனென்றே கூறுவாயாக. அவர் பாதங்களைப் பணிவாயாக. அவர் பாதங்களே உள்ளத்தில் வீற்றிருக்கத் தக்கவை என்று துணிவாயாக நீ கடைத்தேறும் வழி இதுவே ஆகும்.

விசேடக் குறிப்பு

மாலறநேயம் மலிந்தவர் வேடமும்

ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

-சிவஞான போதம் 12-ம் சூத்திரம்

ஆலம் புத்தொளிர் மணிநிறக் கண்டமு
   மவிழ்ந்த செஞ்சடைக் காடு
நீலம் புத்தொளிர் விழியுமை பாகமு
   நிலவு மிழ்முகப் போதுங்
கோலம் புத்தொளி ரானந் தருத்தி
   ரேசத் தமர்குணக் குன்றின்
சீலம் புத்தொளிர் பாததா மரையுமென்
   சிந்தை விட்டக லாவால் (25)

இதன் பொருள்

அழகு நிரம்பிய ஆனந்த ருத்திரேச பெருமானாகிய குணக்குன்றினது ஆலகால விசம் பொருந்திய நீலகண்டமும், விரித்த செந்நிறச் சடையாகிய காடும், நீலநிறம் பொருந்திய விழியை உடைய உமையம்மையை இட பாகத்தில் பெற்றிருப்பதும், நிலவு போன்ற திருமுகமும் சீலம் நிறைந்த பாதத் தாமரைகளும் என் சிந்தனையை விட்டு, எப்பொழுதும் நீங்கா.

அகல வெண்ணுவா ருளத்தினைத் தானுமந்
   ககல வெண்ணுபு நிற்கும்
புகற வெண்ணுவா ருளத்தினைத் தானுநேர்
   புகற வெண்ணுபு நிற்கும்

பகரு மெண்குண வெட்டுரு வத்தனெண்
   டோளன் பார்ப்பதி பாக
விகாரி லானந்த வாந்த நத்தி
   ரேசத் தமர்நிறை யோனே (26)

## இதன் பொருள்

தன் வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை ஆகிய எட்டு குணங்களும் நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய எட்டு உருவங்களும் எட்டு தோள்களும் உடையவரும் பார்வதி அம்மையாரைப் பாகத்தில் பெற்றிருப்பவரும் ஒப்பற்ற வரும் ஆகிய ஆனந்த ருத்திரேச பெருமான் தம்மை எண்ணாதவர்கள் உள்ளத்தினை அவரும் எண்ணாது நிற்பார்; தம்மைத் துதித்து எண்ணுகின்றவர்களுக்குத் தாமும் எண்ணி அருள் செய்வார்.

## விசேடக் குறிப்பு

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (குறள் -

"கண்கள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை,
எண்டோள் வீசிநின் றாடும்பிரான்றன்னைக்
(கண்காள் காண்மின்களோ)"[1]

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய்
எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா
யட்ட மூர்த்தியாகி"[2]

தேவாரம்

1. தேவாரம் நான்காம் திருமுறை பா. திருநாவுக்கரசு சுவாமிகள்
2. தேவாரம் ஆறாம் திருமுறை - திருத்தாண்டகம் பா. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது.

நிறையு மென்பினா லினைந்திலை பணிந்திலை
நெடிதவன் றிசை நோக்கி
யுறைகள் கண்ணினை காலநன் றுருகலை
யுணர தழுதழுத் தில்லாய்
மறைமு டிக்கறா வானந் தருத்தி
ரேசத் தமர்மழ வெள்ளேன்
நிறையை யெங்ஙனம் பெறுகுவை நெஞ்சமே
யென்னை யான்புரி கேனே. (27)

இதன் பொருள்

நெஞ்சமே! நிறைந்த அன்பினால் வேதங்கள் ஒலித்துக் கொண்டிருக்கும் ஆனந்த ருத்திரேசத்தில் அமர்ந்துள்ள இளமை பொருந்திய விடையின் மேல் வருபவனை நிறைவான அன்பு கொண்டு நினைக்கவில்லை. அவன் திருவடிகளைப் பணிதல் இல்லை. அவன் திருக்கோயில் உள்ள திசை நோக்கி கண்களால் பார்த்து உருகவில்லை. அவனை எண்ணிப்பலகாலும் அழவில்லை இப்படியிருக்கும் நீ எவ்வாறு அவனருளைப் பெறுவாய்? உன்னை யான் என்ன சொல்லுவேன்?



பூரிமு ழுக்கவுழ் முண்டகப் புதுமலர்

புத்த வுந்தியி னானை

யாரிவு ழிப்பொழு மகளென வரவழைத் து

தருந்த வர்திருக் கோட்டி

யூரிய தன்மனை யாக்கிய வானந்த

ருத்தி ரேசத் தண்ணல்

விரிவு கழ்ப்பதம் போற்றுந ருள்ளகம்

விடைப்பி னுமீட் பானால் (28)

இதன் பொருள்

அரும்பாக இருந்து மலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பதுமனை தம் நாபி கமலத்தில் தோற்று வித்தருளிய திருமாலை செவ்வரி படர்ந்த கண்களை உடைய பெண்ணாக வரவழைத்துத் தாருகா வனத்து முனிவர்களின் யாகத்திற்கு அனுப்பி அவர்களை நிலைமாற செய்து உயர்ந்ததன் மனைவியாக்கித் கொண்ட ஆனந்த ருத்திரேசத்தில் அமர்ந்திருக்கும் அண்ணலின் விரிவாகிய புகழ் நிரம்பிய திருவடிகளைப் போற்றுகின்றவர்கள் உள்ளம் ஏதோ காரணத்தால் போற்றத் தவறினால் மீண்டும் அதனைத் தம்மிடம் சேர்த்துக் கொள்வார்.

மீட்சி யல்லதோ ரானந்த பெருகொளி

வீட்டி டைக்குடி யேற்றி

யாட்சி கொண்டரு ளானந்த ருத்தி

ரேசத் தமரற வோனை

காட்சி கொள்ளவுங் காணுறாத் திருத்தவுங்

கரிசெ னக்கண் டாங்கே

மாட்சி கொண்டவர்க் காட்சியின் யாத்தனன்
வளர்ந்த வபெரும் போகம் (29)

<u>இதன் பொருள்</u>

தம்மை வழிபடும் அடியாரை ஆனந்த பெருமையாகிய ஒளி பொருந்திய முத்தி நெறியில் குடி புகுவித்து மீளுதல் இல்லாமல் ஆண்டு கொண்டருளும் ஆனந்த ருத்திரேசத்தில் தரும வடிவாக வீற்றிருப்பவனைக் கண்டு தரிசித்தலும் காவாதிருத்தலும் ஆகிய வற்றின் பயனை எண்ணி. பெருமையுடன் வணங்குபவர் களுக்குக் காட்சி கொடுத்துத் தம்மோடு. இணைத்துக் கொண்டுள்ளான். ஆதலால் அடியார்களுக்குப் பெரும் போகமானது வளர்ந்தது.

போகம் வேண்டிய விண்ணவர் குழாங்களைப்
புழுவி லுங்கண்ட யாக்கி
யேக மாகிய வீட்டினைத் தலைப்பட்
வெண்ணி யவடி யாரை
மாக மேத்திய வானந்த ருத்தி
ரேசத் தமர்மணி கண்டன்
பாக சாதனன் முதலியோர் பணிந்தெழும்
பரிசி வீற்றரு மம்மா (30)

இதன் பொருள்

அழியக் கூடிய போகங்களை விரும்பித் தேவர் கூட்டங்களைப் புழுவை விட இழிந்தவர்களாக்கி ஒப்பற்றதாகிய முத்தி இன்பத்தை விரும்பித் தம்மை வழிபடும் அடியார்களைத் தேவர்கள் தொழும் ஆனந்த ருத்திரேசத்தில் அமர்ந்துள்ள மணிகண்ட பெருமான் இந்திரன் முதலானோர் இவர்களைப் பணிந்து போற்றும் சிறந்த பரிசினை அவர்களுக்கு. கொடுத்தருளுவான்.

மாவெழுந் தொலிக்கு ளந்தன வனமு
 மதுமழை சொரிமலர்ப் பொழிலும்
பூவெழுந் துயிர்க்கும் பொய்கையு மருத்துப்
 போகபூமி யின்வளம் விறந்து
பாவெழுந் தேற்று மானந்த ருத்தி
 ரேசம்வாழ் பதியென வமர்ந்த
சேவெழுந் தொலிக்குந் திங்கொடி யானைச்
 சேர்ந்தவர் தீர்ந்ததென் வினையே (31)

இதன் பொருள்

மிருகங்கள் மகிழ்ச்சியோடு வாழும் நந்தவனமும் மலர்களில் மழை போலத் தேன் சொரியும் பொழிலும் பூக்கள் மிகுதியாக மலர்ந்துள்ள திருக்குலமும் சிறந்து விளங்குவதால் போக பூமியின் வளத்தைக் காட்டிடும் சிறந்த புலவர்களால் போற்றப் படுகின்ற ஆனந்த ருத்திரேசம் தான்

தாம் வாழும் திருப்பதியென அமர்ந்துள்ள இடபக் கொடியை உடைய பெருமானை வணங்கி சேர்ந்துள்ளேன். அதனால் என்னுடைய வினைகள் முழுதும் அழிந்து விட்டன.

வினைவள மீட்டி நரகொடு துறக்கம்
 வியனில னென்னுமூன் றிடத்தும்
வளைகலத் திளரி கொட்புறல் போது
 வைகலுங் கொட்புறு வோனை
வினையென விரங்கி யாள்வது கருதி
 யானந்த ருத்திரே சத்துத்
தனைநிக ரில்லா திருந்தவன் றன்றன்
 றன்மையை யாவரே யறிவார் (32)

இதன் பொருள்

 உயிர்கள் தாம் இயற்றிய வினைகளிலிருந்து அலைகளை மீளச் செய்து நரகம், சொர்க்கம் விரிந்த நிலவுலகம் என்னும் மூன்றுலகத்தும் அவை பிறந்து வாழும் போது அவற்றுடன் இடைவிடாமல் சேர்ந்திருப்பவனும் தன்னைப் போல அன்பு கொண்டு உயிர்களை ஆள்வது காரணமாக ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கின்றவனும் ஆகிய இறைவன் செய்யும் நன்மைகளை எவர் தெரிந்து கொள்ள முடியும்.

அறிவிரண் டினையு மடக்குபே ரறிவா
　　யலரியா தியவெரளிக் கெல்லாஞ்
செறியொளி செறிக்கும் பெருகுபே ரொளியாய்த்
　　திலத்தமார் நெய்யென வெங்கும்
பிறிவில தாகி நிறைந்தநின் றருளும்
　　பெரும்பெயர்க் கடவுள்வன் காஞ்சி
குறிகொளா னந்த ருத்திரே சத்தக்
　　குடிகொளுங் குருஉ மறை யூருவன் (3 3)

இதன் பொருள்

இயற்கை யறிவு செயற்கையறிவு ஆகிய இரண்டறிவினையும் அடக்குகின்ற பெரிய அறிவு வடிவாகவும் திருமால் முதலிய சிறந்த தெய்வங்களுக்கெல்லாம் நிறைந்த அறிவை அளிக்கும் விரிவான ஒளிமயமாகவும் எள்ளினுள் எண்ணெய் போல எங்கும் பிரிவு இல்லாமல் கலந்து நிறைந்து நிற்கும் பெரும் பெயர் கடவுளாகவும் விளங்குபவன் காஞ்சி மாநகரில் ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருந்து தம்மை வணங்கும் அடியார்களை அடைந்து இருப்பான்.

உருவமா யருவா யுபயமா யுலகை
　　ருயிர்த்தளித் தழித்துடன் மறைத்திட்
டருளுமா னந்த ருத்திரே சத்தை
　　மமலனை யுள்ளவா றறிவார்
மருளினான் மூவர் தங்களு ளொருவ
　　னாகவே மதித்திட லென்னே

பிருவினால் விழுங்கப் பட்டெரி நிரயத்
   திளைவரீ தென்பா தகமே (34)

## இதன் பொருள்

உருவமாகவும் அருவமாகவும் அருவுருவாகவும் விளங்கி, உலகத்தில் உயிர்களைக் காப்பாற்றி அவற்றுடன் மறைந்திருந்து அவற்றிற்கு அருள் செய்யும் ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் நின் மலனுடைய பெருமைகளை உள்ளவாறு யாரறிந்து கொள்வார்கள். மயக்கஅறிவு கொண்டு, அயன், அரி, ருத்திரேசன் ஆகிய மூவர்களில் ஒருவனாகவே எம்பெருமானை மதித்து எண்ணிப் பாவங்களால் விழுங்கப் பட்டு நரகத்துன்பத்தில் பொருந்துகிறார்கள். இது எப்படிப்பட்ட பாதகமான செயலாகும்.

பாதகம் பலவும் பயிற்றினும் வொதும்பர்ப்
   பல்லைவன் மனமறு மாந்திப்
போதகந் துறந்து மானந்த ருத்திரே
   சத்தவி பொறிபவீற் றிருக்குஞ்
சேதகப் பொருளைச் சிறுவரை யேனுஞ்
   சென்றடி வணங்கிடுற் றிரும்
பீதக வுடைய வாதியர்ப் பன்னாட்
   பேணும் பெருமோ வொன்றும் (35)

இதன் பொருள்

சோலைகளில் உள்ள மலர்களின் தேனை வண்டுகள் நிரம்ப உண்டு மலர்களில் உறங்கிக் கொண்டும், சோலைகள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்தில் சிறப்புடன் வீற்றிருக்கும் இடப் வாகனத்தில் காட்சிதரும் பெருமானை திருவடிகளைச் செய்த பாவங்கள் பலவும் தீர்ந்து விடும். பெருமை அல்லாத பிற தெய்வங்களை வணங்களாலும் செய்த பாவங்களில் ஒன்றுகூட நீங்காது.

ஒன்றதாய்ப் பலவா யுரைகளா யுரையி
  னுணர்தரு பொருள்களா யுலகா
யன்றதா யசல மாயகன் டிதமா
  யப்பிர பேயமா யறிவாய்
நின்றவன் காஞ்சி யானந்த ருத்தி
  ரேசத்து நின்மலர் கொழுந்தை
யென்றுகொல் புணர்வ தென்றவர் யுருகி
  யிருக்குமா லெனதுளப் பேதை (36)

இதன் பொருள்

என்னுடைய உள்ளமாகிய அறிவில்லாத பேதை ஒரு பொருளாகவும் பல பொருளாகவும், பேசப்படும் சொற்களாகவும் அச் சொற்களில் உணரப் படும் பொருள்களாகவும் உலகமாகவும் உலகங்களில் உயிர்களாகவும் அவ் வுயிர்களுக்கு அப்பாற்பட்டதாகவும் அசையும் பொருள்களாகவும் காணாப்படாத பொருள்களாகவும், காணும் பொருளாகவும், அறிவில்லாததாகவும், காணும்

அறிவுள்ளதாகவும் விளங்குகின்ற வலிமை நிறைந்த காஞ்சி மாநகரில் ஆனந்த ருத்திரேசத்தின் வீற்றிருக்கும் நின்மலனாகிய இறைவனை எப்பொழுது சென்று சேர்வது. எப்பொழுது என்வாய் உருகிப் பாடுவது அறியேன்.

பேதையேன் பிழைக்கும் பிழைகளோ வனந்தம்
 பிழைதபத் தீர்வுசெய் வதற்கு
வேதனை மிகுந்த பிணியுட லெட்டா
 தயலவர்க் களித்திட வெறுக்கை
யாதுமொன் றில்லே லானந்த ருத்தி
 ரேசத்து ளெம்பிரா னதனா
லோதுவ சிலகொண் டென்பிழை நூறி
 யுய்யக்கொண் டருள்வதுன் கடனே (37)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் எம்பெருமானே. அறிவில்லாத நான் செய்யும் பிழைகள் மிகவும் அதிகம், நான் செய்த பிழைகளுக்குத் தீர்வு செய்வதற்காக வேதனை மிகுந்ததும் நோய் கூடியதும் மாகிய உடலால் முடியாது மற்றவர்களுக்குக் கொடுத்துதவுவதற்குச் செல்வம் ஒன்று கூட நான் பெற்றிருக்கவில்லை. ஆதலால் அடியேன் ஓதுகின்ற பாக்களை ஏற்றுகொண்டு என் பிழைகளை நீக்கி உய்யக் கொள்ளும்படி அருள் செய்வது உன்னுடைய கடனாகும்.

கடன்முகட் டெழுந்த விடமிடற் றடக்கி

கடவுள ராருயிர் காத்த

விடலிய காஞ்சி யானந்த ருத்தி

ரேசத்த வெம்பிரா னடுத்தேன்

மடலிய மனத்தன் மாகளா வென்று

மருங்குளார் நகைத்திடப் பட்டார்

றடலிய நினக்கே யிழிவுமற் றதனாற்

றாழ்ந்தறா தொண்டுளன் கருளே (38)

<u>இதன் பொருள்</u>

திருபாற்கடலில் அமுதம் வேண்டி கடைந்த போது அக்கடலிலிருந்து தோன்றிய ஆலகால விசத்தை கழுத்தில் அடக்கித் திருமால் முதலிய தேவர்களுடைய உயிரைக் காத்த பெருமை பொருந்திய காஞ்சியில் ஆனந்த ருத்திரேசத்தில் விளங்கும் எம்பெருமானே. உம்மை சரணமாக அடுத்துள்ளேன். நான் அறிவில்லாத மனத்தனாகவும் குற்றமுள்ளவனாகவும் இருக்கிறேனென்று நீக்கி விட்டால் மற்றவர்கள் எள்ளி நகையாடுவார்கள். அதனால் உமக்கே இழிவு உண்டாகும். ஆதலால் என்னை விலக்காது என் தொண்டினை ஏற்று அருள் செய்ய வேண்டும்.

அருஉவ வருஉ வானெனப் பன்னா

ளவாயவா யலந்தலர்ந் தெய்தே

விருளிறங் கழிக கழிகவென் றாடல்

யாவும் பார்த் திருந்தனை நீயுந்

தெருளினர் சூழ மானந்த ருத்திரே
சத்து சிவபரம் பொருளே
வெருளுவ லவிவா தின்றுநீ விடுப்பின்
விரைந்தென திடும்பைநோய் களையே (39)

இதன் பொருள்

அருளினால் தெளிந்தவர்கள் சூழ்ந்துள்ள ஆனந்த ருத்திரேசத்துள் விளங்கும் சிவபரம் பொருளே. தங்கள் அருள் கிடைக்கும் என்று பலகாலும் விருப்பத்தினால் நொந்துநொந்து இளைத்து விட்டேன். நள்ளிருளில் நடனம் புரியும் பெருமானே. என் துன்பம் நீங்கும் நீங்கும் என்று எண்ணியிருந்தேன். துன்பத்தால் மிகவும் வேதனைப் பட்டுள்ளேன். அத் தாங்கள் விரைவாக என் துன்பமாகிய நோயைக் களைந்து விடுவிக்க வேண்டும்.

விசேடக் குறிப்பு

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக வுண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே."

களையினா யுலக முழுவதுங் காக்கும்
கண்ணுதலால் காஞ்சி மாநகரின்
விளைமலப் பொழில்சூ ழானந்த ருத்தி
ரேசத்து வித்தகா தமியேன்

றளையவிழ் புந் ரிருவதே போவந்
   தாளினைத் தருவதற் கேது
திளைபெருங் கருணை யன்றுகொ லதுசெய்
   வித்தகந் திருவருட் டிறமே. (40)

இதன் பொருள்

காஞ்சி மாநகரில் தேன் நிரம்பி உள்ள சோலைகள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்தள் வீற்றிருக்கும் வித்தகரே. உலகம் முழுவதையும் பாதுகாக்கும் கண்ணுதல் பெருமானே. தனியேனுடைய வினைகள் நீங்குவதற்காகவும் திருவடிகளைத் தந்தருளினீர் போலும் அவ்வாறு தந்ததற்கு காரணம் அனைவரிடத்தும் தாங்கள் செலுத்தும் கருணையாலோ அல்லது தங்கள் திருவருள் திறத்தாலோ அறியேன்.

அருட்டிறஞ்சே ரானந்த ருத்திரேசத் தமர்ந்து
பொருட் டிறங்கள் பகுத்தருளும் புண்ணியனைப் புன்மதியைத்
தெருட்டியிரு முதற்குருவை சேர்ந்தார்க் குழலமேனு
மிருட்டிலருக்குமே யெழுந்த வின்னொளியின் மாயுமே. (41)

இதன் பொருள்

திருவருள் திறம் மிகுந்த ஆனந்த ருத்திரேசத்தில் எழுந்தருளி இருக்கும் உண்மைப் பொருளை விளக்கிக் காட்டும் புண்ணிய வடிவமானவனும், புன்மதியைத் தெளிவித்து நீக்கி அருளும் முதற்குருவானவனும் ஆகிய இறைவனை அடைந்த

அடியார்களுக்கு அறிவு உயரும் அஞ்ஞானம் வானத்தில் தோன்றிய இருள் சூரியனால் நீங்குவது போல நீங்கிவிடும்.

மாய்வனவும் பிறப்பனவும் வைகுவனவும் புந்தி
யாயுமெனி லானந்த ருத்திரேசத் தமர்ந்த
தேவுமின மதிச்சடிலச் சிவபெருமாள் பதித்தன்றில்
காயுமல் கிடைச்சிறிதும் கதுவாறு கதுவாதே (42)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் பிறைமதியைத் தம் சடையுள் சூடியுள்ள சிவபெருமானாகிய தெய்வத்தின் திருவடிகளில் நம் மனத்தைப் பதியச் செய்தால் துன்பம் நிறைந்த உலகில் பிறப்பதும் வாழ்வதும் பின் இறந்து விடுவதும் ஆகியவைச் சிறிதும் நம்மை பற்றாது.

கதுவியுயி ரினைக்கவற்றி கலக்குவது மூலமல
மதுகாப்ப தானந்த ருத்திரேசத் தமர்ந்த
விதுவொளிர்பொற் சடைப்பெருமான் விளங்குதிரு வருளதுதான்
முதுமறையின் வழிச்சரியை முதன்மூன்றின் வருவதே (43)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேசத்துள் அமர்ந்த ஒளிபொருந்திய பொன் போலும் சடையை உடைய எம்பெருமானின் விளங்குகின்ற திருவருளால் தான் உயிர்களை,

மூலமானது பிடித்து சூழற்றி கலக்குவதிலிருந்து காப்பாற்றபட முடியும். அத்துடன் வேதங்களில் சொல்லப்பட்ட நான்கு படிகளாகிய, சரியை கிரியை யோகம், ஞானம் ஆகிய மூன்றும் கிடைக்கப் பெறும்.

விசேடக் குறிப்பு

"வேத நாயகன் வேதியர் நாயகன்"

— திருநாவுக்கரசர், ஆதிபுராணம்,

தேவாரம் 5-ம் திருமுறை.

வருவதும்பின் போகுவது மாயுழலு மானுடத்தீ
ரிருள்பிரிந்த வானந்த ருத்திரே சத்தமிழ்தை
யொருமுறையேத் திடினுங்க ளுலமந்த பவமறையு
மிருமுறையேத் திடினும்மை யெய்தினர்க்கும் பிறப்பிற் (44)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் அமிழ்தம் போன்ற இறைவனை யொருமுறை துதித்து வணங்கினால் உங்களைத் துன்பப்படுத்தும் வினைகள் நீங்கும் இரண்டு முறை துதித்து வணங்கினால் உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் மானுடத்தில் பிறப்பதும் பின்னர் இறந்து போவது மாக உழல்கின்ற பிறப்பு நீங்கும்.

இவ்வுடலுக் குபகார முயற்றியுழ நாள்வீணே
வழுவதுசெய் தானந்த ருத்திரே சத்திறையை
பெறுவது செய் தாயில்லை பிழையிற்பட் டலித்தாய்
கொழுகுன்றுக் குஞ்சமனா துங்கோட்பட் டாய் மனக்கும் (45)

(வாழ்நாளை வீணே கழித்தாய்)

மனமே! அழிந்து போகின்ற உடலுக்காக பலகாலும் வீணாக உபகாரங்கள் செய்து வாழ்நாளைக் குறைத்துக் கொண்டாய் ஆனந்த ருத்திரேசத்து விளங்கும் இறைவனை அடைவதற்கு முயற்சி சிறிதும் செய்தாயில்லை. எப்பொழுதும் தவறுகள் செய்து கொண்டிருக்கிறாய். உன்செயல் மலையில் முட்டிக் கொண்ட குஞ்சு போல தீயவற்றால் நீ பிடிக்கப்பட்டாய்.

குரங்குமனந் துறவோர்க்குங் கொடியிடையார் நடநவிற்று
மரங்கமலி யானந்த ருத்திரேசத் தடிகளை
வரங்களெனத் தனதருளை வயக்கமுறுந் தனைமன்ற
வரங்கியரு ளுவனென்றால் யாதுவரம் பெறாரவன்பால் (46)

<u>இதன் பொருள்</u>

மகளிர் நடனமாடிக் கொண்டு வலம் வரும் மரங்கள் மிகுதியாக உள்ள சோலைகள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்துள் அமர்ந்திருக்கும் இறைவனை தன்னை வழிபடும் குரங்கு போன்ற மனத்தை நன் மனமாக்கி துறவிகளுக்கு தனது கருணையாகிய வரங்களை மிகுதியும் கொடுத்தருளு கின்றவனுமாகிய வனைத்

துதித்து எங்களுக்கு வரங்கள் தந்தருள வேண்டுமென்று வணங்கினால் அவனிடத்தில் எந்த வரமும் நிச்சயமாகப் பெறாமல் இருக்க மாட்டார்கள்.

டாலொத்த திருநீற்றான் பவளத்த னொளிருவா
னீலத்தி னவிர்மிடற்றா னிலாநகையா னிழல்கருத்து
மாலத்த னானந்த ருத்திரே சத்தமலன்
கோலத்தைக் குறிக்கொண்டேன் பிறர்கோலங் குறியேனே (47)

இதன் பொருள்

பால்போலும் வெண்மையாக திருநீற்றை அணிந்தவனும் உலகத்தில் பிரகாசிக்கும் உருவம் கொண்டவனும் நீலநிறம் பொருந்திய விடத்தைக் கழுத்தில் உடையவனும் நிலவு போன்ற தவ்விய குறுநகை சடையவனும் பெருமைபொருந்திய ருத்திரேசத்துள் விளங்கும் மலமற்றவனும் ஆகிய இறைவன் திருவடி நிழல் பொருந்திய திருக் கோலத்தை உற்று குறிக்கொண்டு வணங்குகிறேன். மற்றவர்களுடைய அழகை எண்ண மாட்டேன்.

குறியேது மில்லானென் குறிமாற்றக் குறியேற்றா
னறிவான னானந்த ருத்திரே சம்பதியா
யுறைவானென் பதியெனக்கிங் கொழிக்கிற்ப னிளமானின்
முறிமேனி தரித்தானென் முடைமேனி கழிப்பவே (48)

இதன் பொருள்

அறிவு வடிவமானவனும் ஆனந்த ருத்திரேசத்தை இடமாகக் கொண்டு

உறைவானும் தனக்கென அடையாளமேது இல்லாதவனும் என் குறியை மாற்ற அக்குறியை தான் ஏற்றுக் கொண்டவனும் ஆகிய இறைவன் என்னை இங்கு இருக்கச் செய்து இளமையான மாந்தளிரின் நிறத்தை தன் மேனியில் தரித்தான். என்னுடைய புலால் நாறும் உடம்பை நீக்கினான்.

கழிகாதல் பெற்றார்கள் கைகண்டார் காஞ்சிநக
ரழியாத வானந்த ருத்திரே சத்துறையை
யொழிக்காதல் பெற்றார்க ணெறல்வேண்டல் வரையூச்சிப்
பழிகான முடயில்னிற் பொரிதுபிர்த்த வாறாமகல் (49)

இதன் பொருள்

காஞ்சி மாநகரில் அழிவில்லாத ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் இறைவனை மிகுந்த அன்பு கொண்டு வணங்கியவர்கள் அவன் திருவருளைப் பெறும் அடைந்தார்கள். அவனிடத்தில் அன்பு கொள்ளாதிருந்தவர்கள் அவனை அடைதல் என்பது மழையில் உச்சியில் பொழிந்த கருணை பொத்தலுடைய பாத்திரத்தில் வைத்தால் பயன்படாதவாறு போலப் பயன்படாது.

மாலிருந்த வலக்கரத்தான் வரையிருந்த விடக்காத்தான்
நூ விழுத்த மணித்தேரா ணொருநாள் வர்க்களிப்ப
வாலிருந்த வானந்த ருத்திரே சத்தமலர்
கோலமிடல் வழக்கன்றே யுறுமலத்தின் வெரிஇயினரே (50)

இதன் பொருள்

ஒளி பொருந்திய ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் விமலனுடைய வலக்கரத்தில் மழு இருக்கும் இடப்பாகத்தில் இமய மலையில் அவதரித்த இறைவி விளங்குவாள். வேதமாகிய நால் இழுத்த அழகிய தேரையுடையவன் ஜனகாதி முனிவர்களுக்கு வேதங்களை அருளிச் செய்தான். அத்தகைய இறைவன் சன்னதியில் கோலமிட்டு அழகு படுத்துகின்ற படிக்க மில்லாதவர்கள் நன்புறத்தும் மும் மலத்தால் வேதனை பட்டு உழல்வார்கள்.

வெருவுவதென் வருவினைக்கு மடமைநெஞ்சே வேலைவிட
  மிடற்றடக்கி விண்ணோர்க் கெல்லா
மருவியென விழிவிழ்த்த புலைமாற்றி யாவிரு
  ளானந்த ருத்தி ரேசத்
தொருபொருளுன் டவ்பெயருண் டவையன்றி யோங்கிவத்
  திருவெழுத்தை யுரைத்துப் போற்றின்
பெருகியபே ரின்பவெள்ளத் தழுந்தி யொன்றாய்
  பிறைந்தவி ழு னைஞ்ஞான்றும் பிழையின்றே (51)

இதன் பொருள்

நெஞ்சமே நமக்கு வரயிருக்கும் எதிர்வினைக்கு ஏன் பயப்பட வேண்டும். பாற்கடலில் வந்த ஆலகால விடத்தை உண்டு கழுத்தில் அடக்கிய தேவர்களுக்கெல்லாம் வந்த அச்சத்தால் கண்கள் சோர்ந்த இழிவை மாற்றிஉயிர் கொடுத்தருளிய ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் ஒப்பற்றவனை அடைந்து சிறப்புற்றோங்கும் திருவைந்தெழுத்தை பலகாலும்

சொல்லிப்போற்றி துதித்தால் பேரின்பமாகிய வெள்ளத்தில் அழுத்தி
அவனோடு ஒன்றாய் இணைந்து விடுவாய். இனி எப்பொழுதும் துன்பமேயில்லை.

இன்றாவுத் தீவினைகள் சால வாற்றி
யெழுநான்கு கோயளற வனத்தழுந்தி
நின்றவினைப் பயனருந்தப் பிணிகள்பல்ல நெருங்கியவர்ச்
கையிற் கிடந்த நெஞ்சே காண்டி
நன்றியினி வேண்டுமெனிற் காஞ்சி மூனா ரி
நலத்தகையை யாவந்த ருத்தி ரேசத்
தொன்றியொளிர் பரம்பானைத் தேவர் தேவை
யுன்னுதியன் னவனடியா ருவக்பச் செய்யே (52)

இதன் பொருள்

மனமே! இதுவரை செய்த வினைகளின் பயனை நுகர்ந்து பல
பிணிகளால் அடர்கொண்டு துன்பப்படுவதைக் கண்டிருக்கிறாய் இனியாகிலும்
நீ நன்மையடைய வேண்டுமெனில் கச்சிமூனா ரில் நல்ல பண்புகளை அருளும்
ஆனந்த ருத்திரேசத்தில் அடைந்த அங்குள்ள இறைவனோடு ஒன்றி பரம்பரனாகிய
தேவனை பலகாலும் எண்ணுவாயாக. அவனுடைய அடியார்கள் மகிழும்
செய்ல்களைச் செய்வாயாக.

செய்யவுரு வான்வெள்ளை நீற்றா னிலந் செறிபுடற்றான்
செறிபுடற்றான் பொற்சடையான் பைங்கட் டுத்திப்
பையரவப் புண்ணா னுடுத்த தோலான்
பல்லெடுத்த கபாலத்தான் பயிலற் கூத்தான்

மையளக வுமையிடத்தான் மழுவெள் ளேற்றான்
மருங்குயிடை பூதத்தா னென்று வாழ்த்தி
பையணைநல் லானந்த ருத்தி ரேசத்
தடிகளைகண் டார்காணா ரவல நோயே (53)

<u>இதன் பொருள்</u>

சிவந்த திருமேனி யுடையவனும் தூய நீறணிந்தவனும் நீலநிறம் பொருந்திய கழுத்தையுடையவனும் பொன்போலும் சடையுடையவனும் பசிய கண்ணும் விசம் பொருந்திய படமும் உடைய பாம்புகளை ஆபரணமாக அணிந்தவனும் தோலாடை அணிந்தவனும் பற்கள் பொருந்திய பரம்மக் கபாலத்தைக் கையில் உடையவனும் சிறந்த கூத்தாட்டுபவனும் மைபோலும் கூந்தலை யுடைய உமையம்மை இடப் பாகத்தில் உடையவனும் இளமை பொருந்திய வெள்ளேற்றில் ஊர்ந்து வருபவனும் பூத கணங்கள் சூழ வருபவனும் என்றும். ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் அடிகளைக் கண்டு வாழ்த்தியவர்களைத் துன்பமாகிய நோய் சென்றடையா.

நோயிலியை மலமாயை கன்ம மில்லா
நோன்றகையை நா லுரைத்த முனைவன் தன்னைத்
தாயிலியைத் தத்துவனை யுலகுக் கெல்லாற்
தாயாகி யருள் சுரக்குந் தந்தை யானை
வேயின்தோ ளுமைபூசை கொண்ட காஞ்சி
வேதியனை யானந்த ருத்தி ரேசக்
கோயிலிடை குருமணியைக் கூறு வார்கள்
குவலயந்தங் கூற்றின்வழி நடப்பக் கொள்வார். (54)

இதன் பொருள்

பிறவி நோய் இல்லாதவனும் மும்மலம் இல்லாதவனும் வேதங்களை யெல்லாம் இருளிச் செய்தவனும் பெற்ற தாயை இல்லாதவனும் தத்துவ விழவமானவனும் உலக உயிர்களுக்கெல்லாம் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அருள் கொடுப்பவனும் மூங்கில் போலும் தோளை உடைய இறைவி பூசிக்கும் பேறு பெற்ற காஞ்சியும் பதில் ஆனந்த ருத்திரேச திருக்கோயிலில் விளங்கும் குருமணியும் ஆகிய இறைவனைப் போற்றி துதித்து வணங்குகின்றவர்கள் சொல்லும் வழியிலே உலக மக்கள் நடந்து வருவார்கள்.

வாரணிந்த வடம்பூட்டித் தோய்யி ரீட்டி
மையெழுதி யலர்சூட்டி மாத ரார்பாற்
நீரவிய வொருவருக்செப் பாமை நீயே
செல்கின்றாயே நான்மறையுஞ் செல்வக் காஞ்சி
யே ரணிந்த வானந்த ருத்தி ரேசத்
தெம்மானை யிறைஞ்சாயென் றரற்றா நின்றும்
போரவிந்த விடையானை யேகம் பத்தெம்
புண்ணியனை நெஞ்சேசே ராயி தென்னை (55)

இதன் பொருள்

நெஞ்சே! காஞ்சிமாநகரில் சிறந்து விளங்கும் ஆனந்த ருத்திரேசத்தின் வீற்றிருக்கும் எம்மானை வணங்கி அவன் திருநாமத்தைப் பலகாலும் சொல்லா திருக்கின்றாய். மற்றும் கொள்ளும் தன்மையுடைய விடையின்மேலூர்ந்து

வரும் திருவேகம்பத்துள் புண்ணிய வடிவமானவனைச் சென்று அடையாதிருக்கின்றாய். ஆனால் கச்சணிந்து ஆபரணங்கள் பூட்டித் தொய்யில் எழுதி கண்களில் மை எழுதி கூந்தலில் மலர்களைச் சூட்டிக் கொண்டு செல்லும் பெண்கள் இடத்தில் ஒருவரும் 'செல்' என்று சொல்லா முன்னமே நீயே சென்று அடைகின்றாய் இது என்ன விந்தை.

என்னுயிருக் குயிர்போலுங் கச்ச பேசத்
 தெம்பெருமான் போலுமெழி லேகம் பத்து
மன்னியொளி ரேகம்ப வாணன் போலு
 மயானத்து மணிபோலுங் காரோணத்துத்
துன்னுநிழற் கூவிளத்துத் தோன்றல் போலுந்
 தூயநெறிக் காரைக்காட் டிறைவன் போலும்
பொன்னிமைக்கு மானந்த ருத்தி ரேசம்
 பொற்பவீற் றிருந்தருளும் புராணன் றானே (56)

இதன் பொருள்

பொன்போலும் ஆனந்த ருத்திரேசத்துள் அழகு பெற வீற்றிருக்கும் என் பெருமான் தான் என் உயிருக்கு உயிர் போலும் சிறந்து விளங்கும் கச்ச பேசத்துள் கச்ச பேசனாகவும் அழகு பொருந்திய திருவேகம்பத்தில் நிலைபெற்று விளங்கும் ஏகம்பவாணனாகவும், கச்சிமயானத்துள் மணிபோலும் சிறந்தவராகவும் திரு காயாரோகணத்துள் வில்வ மரத்தடியில் விளங்கும் பெருமானாகவும் திருநெறி காரைக் காட்டில் விளங்கும் பெருமானாகவும் விளங்குகின்றார்.

தானேவல் லிருட்கிடந்த நாட்பி னாக்கை
தந்துமன மாதி யாற்றமைத் தகன்ற
மானாது பொருந்திமல பாக மாக்கி
யருள்பதித்துத் கன்மநே ராக்கி யாண்ட
வானேயு மானந்த ருத்தி ரேச
வாதனைமா வடிமுளைத்த மாணிக் கத்தைக்
கானேயு மலர்தூ விக் கருணை நோக்கிக்
கரைந்தருகிப் பணிகடப்பா ருவ தென்றே (57)

இதன் பொருள்

இருண்ட கருவறையுள் கிடந்த உயிர்களைக் கருணையினால் உடல் கொடுத்து மனம் முதலாகிய கருவிகளைக் கொடுத்து விசலாமாகிய இவ்வுலகில் பிறக்கச் செய்து பின்னர் அவற்றிற்கு மலங்களைப் பக்குவம் செய்து நீக்கித் தம் திருவருளை அவ்வுயிர்களில் பதித்து இரண்டு வினைகளையும் சமமாக்கி ஆண்டு கொண்ட சிறந்த ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருப்பவனும் ஒற்றை மாவடியில் விளங்கிய மாணிக்கம் போன்றவனுமாகிய இறைவனை மலர்தூவி அன்போடு

என்றும் வெண்மதியும் விலகி யேரு
மொழிற்காமக் கோட்டம்வாழ் காஞ்சி மூதூர்
மன்றா டு காப்புநட மாடு முக்கண்
வள்ளலை ரானந்த ருத்தி ரேசன்

வென்றாடு மலவலியை யறுத்த லோடு
மேலானே னநுசுத்தத் தருளா மென்றான்
நன்றாளி லிருந்தொழில் புரியப் புக்கேன்
றகுதியின்மை காட்டினான் றனிந்தய்ந் தேனே (58)

இதன் பொருள்

வான்வழி செல்லும் நிலவு தனக்கு நேராக செல்லாமல் ஒதுங்கி செல்லும் அமைப்புடைய அழகு பொருந்திய காமக்கோட்டம் பொருந்தியுள்ள காஞ்சியம் பகுதியில் சிறப்பான வகையில் காப்பு நடனம் செய்யும் பெருமானும் ஆனந்த ருத்திரேசத்தன் வீற்றிருக்கும் பெருமானும் ஆகிய இறைவன் வலிமை பொருந்திய மும்மலங்களை நீக்கியருளி உயர்ந்ததாகிய தூய்மையான தம் அருளைச் செய்தான் அதனால் நன்மை தரும் செயல்களைச் செய்ய தொடங்கினேன் அத்துடன் என்னிடம் உள்ள தகுதியின்மையை விளக்கினான். நான் அத்தகுதியின்மையை நீக்கி நன்மை அடைந்தேன்.

உய்ந்தாமென் றமரர்தொழு தாட நோக்க
முறுத்தவர்கள் வேட்டவா முதவு நாதன்
பந்தாடு புன்முலையாள் பாகத் தண்ணல்
பண்பினைகு மானந்த ருத்தி ரேசன்
பிந்தாத விருண்மலமும் யானும் பிந்தப்
பெயர்ந்தமல மறுத்தாங்குத் தருகி னேனை
முந்தாத வகைதெரித்துத் தான்முன் னாகி
முடியாத முன்வெள்ளத் தழுத்தி னானே (59)

இதன் பொருள்

தேவர்கள் தாங்கள் உய்வது கருதி தங்கள் திருவடிகளைத் தரிசித்து வணங்குவர் அவ்வாறடைந்தவர்களுக்கு அவர்கள் விரும்புகின்றவற்றை உதவுகின்ற பெருமானும். அழகிய ஆபரணங்கள் அணிந்த இறைவியை இடபாகத்தில் பெற்ற தலைவனும் தனக்கென் குணங்கள் இல்லாதவனும் ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருப்பவனுமாகிய இறைவனை நான் வணங்கினேன் என்னிடமுள்ள மும்மலங் களையும் நீக்கி அவை மீண்டும் அணுகா வண்ணம் அருள் செய்து மீளுதல் இல்லாத ஆனந்த வெள்ளத்துள் என்னை ஆழும்படி செய்தான்.

அழுத்தினான் சூலத்தி னெடுமா லாக்கை
　யரந்தேற்றான் மலர்த்தவிசிற் கிழவன் சென்னி
விழுத்தினான் வாளிரவி யெயிற்றுப் பந்தி
　வீட்டினா னறக்கனொடு மெச்ச னாவி
வழுத்தினார்க் கருள்சுரந்து வேட்ட முற்றும்
　வழங்கிடு மானந்த ருத்தி ரேசன்
கொழுத்தின்னா நெறிக்கடனி யென்னைத் தட்டுங்
　கோணைமலப் பெரும்பகையை குமைத்திலானே (60)

இதன் பொருள்

தம்மை போற்றித் துதிப்பவர்களுக்கு அருள் வழங்கும் ஆனந்த ருத்திரேச பெருமான் சூலத்தினால் திருமாலை அழுத்தினார் தாமரை பூவில் வீற்றிருக்கும்

பிரமனின் தலையை அரிந்த மண்டை ஓட்டைக் கையில் பெற்றான். ஒளி பொருந்திய சூரியனின் பற்களை உதிர்த்தான் தக்கன் எச்சன் ஆகியவர்களின் உயிர்களை நீக்கினான். ஆனால் அகம்பாவத் தீய வழியில் செல்லும் என்னிடம் மலங்களாகிய பகையை அழிக்கவில்லை.

குமைத்தா னெதிர்ந்த காலனுயிர்

கோல மாரன் றனக்குருவ

மமைத்தான் காஞ்சி யானந்த

ருத்தி ரேச னெனவஞ்சி

யிமைத்தாற் பழுத வருமாலென்

றெண்ணி யிமையா தமரரெலாந்

தமைத்தாம் பேணி விசும்பிருந்தார்

தனாமா தவத்தோர் நகைக்கவே (61)

இதன் பொருள்

காஞ்சியில் ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் பெருமான் தம்மை எதிர்த்த இயமன் உயிரை அழித்தார்; அழகிய மன்மதனைக் கோபங்கொண்டு அழித்தாரெனப் பயந்த தேவர்களும் தாங்கள் கண்ணை அமைத்தால் பழுது வரும் என்று எண்ணி ஆகாயத்தில் இமைக்காது இருக்கின்றார்கள். அவர்கள் தங்களைத் தாங்கள் பாதுகாத்துக் கொள்ளவே இவ்வாறு வானில் இருக்கிறார்கள் தவசிகள் அவர்களைக் கண்டு எள்ளி நகையாடுகிறார்கள்.

நகைக்கு முறுவ னெருப்பான
   னெறிவிணக் கரத்து நெருப்பானாக்
நகைக்கு நதற்க னெருப்பானாற்
   றயங்கு முருவு நெருப்பானான்
முகைக்குஞ் சோலை யானந்த
   ருத்தி ரேச முழுமுதலே
பகைக்கும் பகையு நினக்குளதாயிப்
   பாரினி ருக்கு மிருக்குமே (62)

இதன் பொருள்

மலர்கள் மலர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்தின் வீற்றிருக்கும். முதற்பொருளே நீ சிரித்தால் அது நெருப்பாகிறது. உம்முடைய இடக்கரத்தில் நெருப்புள்ளது. உன்கண் நெருப்பாக உள்ளது. உம்முடைய உருவம் நெருப்பாக உள்ளது ஆகையால் உம்மை விரோதம் செய்யும் வகைவர்கள் இந்த உலகத்தில் இருக்க முடியுமா முடியாது.

இருக்கு முதலா நான்மறையு
   மெழுந்து நாடி யெட்டாமற்
றருக்கு விரியு மானந்த
   ருத்தி ரேசத் தனிபெருமா

இருக்கிய யனியே யுளமுழுது
மோவா வின்பம் துறைபடியச்
செருக்கு மலத்தின் றிறனழிந்தாள்
றேங்கிற் றெங்கு மருட்கடலே (63)

இதன் பொருள்

இருக்கு, யஜுர், சாம, அதர்வனம் தம் கருவம் அழிந்து போற்றும் ஒப்பற்ற பெருமானாக விளங்குபவனே என் உள்ளத்தை உருக்கி கருணையை உள்ளம் முழுதும் நிறைய செய்து நான் இன்பமாகிய துறையுள் மூழ்கும் படி அருளி செய்ய வேண்டும். அதனால் என்னுடைய செருக்கு மிகுந்த மலங்களின் ஆற்றல் அழிந்து விடும். உம்முடைய அருள் தேங்கி நிற்கும்.

கடலாய் விரிந்தான் மழையானான்
கதிர்த்த மணிக்குன் றுகளானா
விடனா ரடவி முழுதானா
னெல்லா மானான் காஞ்சிநகர்
மடலார் சோலை யானந்த
ருத்தி ரேசம் வதிவள்ளல்
படமா வணியே யுளம்புகுந்து
பயின்றா னிங்காப் பரிசினனே (64)

### இதன் பொருள்

மலர்கள் மலர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்தன் விளங்கும் வள்ளலாகிய கடலாக விரிந்துள்ளான். பெய்யும் மழையாக விளங்குகிறான். பிரகாசிக்கின்ற நவமணிகளாக விளங்குகிறான். விசாலமான பூமியாக விளங்குகிறான். மற்றுமுள்ள பொருள்களாகவும் விளங்குகிறான். அத்தகையோன் இரங்கதக்க என் உள்ளத்தில் படமாகப் புகுந்து பயில்கிறான் இது அவன் செய்த பரிகாரும்.

பரிசில் விழைந்து மாறுடனாய்ப்
பதுமத் தடங்க வான்மசவான்
பெரிய வெறுக்கை தனைதனைப்
பெரிதும் பாவாற் புகழ்புலவீர்
கரிசு தவிக்கு மானந்த
ருத்தி ரேசக் கண்ணுதல் பால்
விரசு மன்பிற் பாப்புனையின்
வேட்ட வேட்டாங்கு கருக்குமே (65)

### இதன் பொருள்

புலவர்களே துன்பங்களை நீக்குகின்ற ஆனந்த ருத்திரேசத்தன் வீற்றிருக்கும் கண்ணுதல் பெருமானிடத்தில் பரிசில் பெற விரும்பி தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் விசாலமான கண்ணுடைய திருமாலும், நூறு யாகம் செய்து இந்திர பதவி பெற்றவனும் புசித்துப் பெரிய செல்வ நிலைகளைத் தங்களுடையது ணைப் பெற்றுள்ளார்கள். ஆதலால் மிகுந்த அன்புடன் பாக்களைப் புனைந்து எத்துங்கள் நீங்கள் விரும்பியவை விரும்பியவாறே உங்களை வந்தடையும்.

அடுக்கு மலமே மாயையே
யடர்க்குங் கன்ம மெனமூன்றும்
விடுக்கு மடியார் தாந்தானாய்
விளையாட் டயர்ந்து பயனெவர்க்குங்
கொடுக்குங் காஞ்சி யானந்த
ருத்தி ரேசக் கொழுதமனை
உடுக்கு முடையரி வென்காரியு,
மொளிரென் பணியும் வடிவுமே (68)

இதன் பொருள்

எண்ணற்ற ஆணவ மலமும். மாயையும் கன்புறுத்தும் கன்பமும் என்னும் மூன்று மலங்களும் நீக்கிய அடியார்களை தங்கில் இணைத்து அவர்களைத் தம்மை போலாக்கி அலகிலா விளையாட்டுகளைப் புரிந்து அனைவருக்கும் நன்மையை அளிக்கும் காஞ்சியும் பகுதியில் ஆனந்த ருத்திரேசத்துள் விளங்கும் மணி போன்ற பெருமான் உடுக்கும் உடை யானையின் தோலாகும் அணிந்து கொள்ளும் ஆபரணம் பாம்புகளாகும்.

வதிவம் புவனந் தொறுந்தானும்
வதிந்து வினை விளையாட்டிப்
பொதியு மலத்தின் வலிதேய்த்துப்
புனித மாக்குந் திருக்காஞ்சி
பதியில் வளரு மானந்த
ருத்தி ரேசப் பசுபதிதன்

கதிர்செய் மணிசூ புரக்கழற்றான்
கருதா வினைக்குந் தீர்வுளதோ (67)

இதன் பொருள்

உயிர்கள் வாழுகின்ற பல புவனங்கள் தோறும் தாமும் அவ்வுயிர்களுடன் வாழ்ந்து அவற்றிற்கு நல்வினைகளை இனிமையுடன் பொருந்தச் செய்து முன்பிருந்த மும்மலங்களின் ஆற்றலை அழித்துத் தூய்மையாக்குகின்ற காஞ்சியம் பதியில் விளங்குகின்ற ஆனந்த ருத்திரேச பசுபதியின் ஒளிசெய்யும் வீரக்கழலும் சிலம்பும் அணிந்த திருவடிகளை எண்ணி வணங்காதவர்களுக்கு அவர்கள் வினைகள் எக்காலத்தும் தீராது.

"பிணக்கில்லாத பெருந்துறை பெருமான்
உன்நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்பமே வரும்
துன்பமே துடைத்து"

உளமே பிழைத்தா யுலையென்பா யுள்ளே
பிழைக்கும் பிழை கேண்மோ
வளமாம் பொழிலசூ ழானந்த ருத்தி
ரேசத் தெம்பெருமா
னளமாந் தரும்பு போனம்மை யாக்கப்
பணிக்குந் தொழிலெல்லாம்
வளரா நிற்பநி றினதாக மதித்தாய்
பவத்திற் கதித்தாயே (68)

இதன் பொருள்

மனமே நான் தவறு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுகிறாய் ஆனால் மறைவாக செய்கின்ற தவறுகளைக் கேட்பாயாக. வளமான பொழில்கள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் நம் பெருமான் இரும்பிலுள்ள துரும்பு நீக்கப்படுவது போல் நம்மை வினைகளை நீக்க அருள் செய்யும் பணிகளை எல்லாம் வளராமல் நிறுத்துகிறாய். மற்றும் நீ செய்ததாக எண்ணுகின்றாய். மீண்டும் மீண்டும் பிறவியிலே செல்ல எண்ணுகின்றாய்.

தாயா யிரங்கி யானந்த ருத்தி
 ரேச் தனிவள்ளல்
மாயா வுருவ மெனக்களித்து
 மாயா வுருவிற் றான்வதிந்து
தோயா திருக்கு மவனியல்பு
 சூழ்ந்தா யாகின் மடநெஞ்சே
வீயா நின்றங் கபாவமாய்
 வெற்ற வின்பந் திளைப்பாயால் (69)

இதன் பொருள்

அறிவற்ற நெஞ்சமே ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருக்கும் ஒப்பற்ற வள்ளலாகிய பெருமான் தாய் போல அன்பு கொண்டு நமக்காக இரங்கி தம்மனையயானி உடலைக் கொடுத்து நம்முள் நாம் காணாத வடிவில் நம்முடன் வீற்றிருந்து நாம் செய்யும் செயல்களுக்குப் புறம்பாக இருந்து வாழும் அவன் இயல்புகளைப் பாவங்கள் செய்யாமல் இன்பத்திலே மூழ்கி இருப்பாய்.

பாயா வேங்கை மடவாரும்
பமர றாமு மாட்டுவக்காற்
காயா நிற்கும் வாளரவக்
கலன்பூண் டெழிலு மார்பத்தான்
ஞாயார் வணங்கு மானந்த
ருத்தி ரேசத் தொழுலுத்து
னோயா வின்பத் தாகுறுத
வொழிப்பார் யாவர் யாவரே (70)

இதன் பொருள்

ஞாய்மையுள்ள அடியார்கள் வணங்கும் ஆனந்த ருத்திரேசத்தன் பாம்புகளாகிய ஆபரணங்களை மார்பிலணிந்த எம்பெருமான் திருவடிகளை இடைவிடாமல் தொழுவவர்கள் தேவர்கள் வணங்கும் இன்பத்தை அடைவார்கள் மற்றவர்கள் வேங்கை மரம்போலும் அறிவில்லாதவர்கள் போலவும் தேவர்கள் போலவும் ஆவார்கள்.

யாவரும் வந்துவ ணங்குபோத
வெம்பெரு மாறை காட்சிவைகுங்
காவல ரானந்த ருத்திரேசங்
காதலிற் கண்டவ ரேத்தொருத்தார்
பூவனை நான்முக வன்பதமும்
பூதல மோரடி யாவளந்த
தேவன்வை குந்தமும் பொன்னுலகுஞ்
செல்லர் கீழ்ப்படவும் பர்சேர்வார். (71)

இதன் பொருள்

எத்தகையவர்களும் வந்து திருவடிகளை வணங்கி போற்றும்படி சோலைகள் சூழ்ந்த ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும். எம்பெருமான் உடைய திருவோலக்கக் காட்சியை அன்புடன் தரிசித்து அவனை ஏத்தி வணங்குகின்றவர்கள் பிரமனுடைய உலகமும் இம்மண்ணுலகை ஓரடியில் அளந்த திருமால் வீற்றிருக்கும் வைகுந்தமும் தேவர்கள் வாழும் இந்திர லோகமும் செல்லமாட்டார்கள். அவை கீழ்படவும் அதற்கும் மேலாக இறைவன் முத்தி இன்பத்தை அடைவார்கள்.

விசேடக் குறிப்பு

'யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'
- திருக்குறள்

சேர்ந்த நெறிந்தகுரங் கின்மாதர்
செல்விழி பார்வையிற் பட்டுறாமை
வார்ந்த சடைப்பெரு மானைக் காஞ்சி
வைப்பின் முளைத்த மருந்தையன்பர்
சார்ந்த வணங்குமுக் கட்கரும்பைத்
தவளவெண் ணீற்றரு வசனைச் சீர்த்தி
யார்ந்தொளி ரானந்த ருத்திரேசத்
தண்ணலை யெண்ணரின் னாள்வாரே

இதன் பொருள்

தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் பெண்களுடைய மீன்போலும் கண்பார்வையில் அகப்படாமல் நீண்ட கடையை உடைய பெருமானும் காஞ்சியம் பதியில் ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் தலைவனும் மூன்று கண்களை உடைய இரும்பு போன்றவனும் வெண்ணீறு தரித்த திருமேனியை உடையவனும் அமுதம் போன்றவனுமாகிய இறைவனை அன்பர்கள் அடைந்து வணங்கி என்னப் போற்றினால் அவர்கள் தேவலோகத்துக்கு அரசனாகி ஆட்சி செய்வார்.

ஆள்வது செய்தெனைத் தன்றெழும்
  பிணக்கு தற்கேமன வாக்குக்காய
நாள்வயிற் றந்தநன் னாமைகண்டு
  நாதனல் லானந்த றாத்திரேச
மூன்வது செய்தெழு காதலோடு முன்னிமி
  ருந்துவணங்கி யிட்டான்
மீள்வது செய்திட லாகுங்கொல்
  லோமேத்தகு மத்தறா தெய்வச்சூழல் (73)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேஸ்வரத்துள் வீற்றிருக்கும் பெருமான் நம்மை ஆள்வது காரணமாக நமக்குக் கொடுத்துள்ள மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றும் அவனை வணங்காமல் மாறுபட்டு செயல்படுவதை உணர்ந்து இறைவனிடத்தில் அவை அணுகாமையையும் கண்டு அவனிடத்தில் அன்பு கொண்டு அவனிடம் சென்று வணங்கி தோத்திரம் செய்தால் மிகமிக உயர்ந்த அத்தெய்வ சூழலிலிருந்து மீண்டுவராத நிலை ஏற்படும்.

சூழலங் காரமும் போதமற்றுந்
தொல்லுலி கத்தவர் காற்றநல்கி
கேழலங் கோடு மராவுமென்பும்
கேழ்த்த திருவுருத் தாங்கியாழி
யேழல மந்து கலங்கவைய
மேஙக வெழுந்தநஞ் சுண்டதென்னே
யூழலங் கானந்த ருத்திரேசத்
தொகையின்வை கயவும்பர் வேந்தே (74)

இதன் பொருள்

சிறப்புப் பெற்ற ஆனந்தருத்திரேஸ்வரத்தில் வீற்றிருக்கும். தேவர்களுக்குத் தேவனே தாங்கள் உம்மை வணங்கும் அடியார்களுக்கு இன்பந்தரும் நற்சூழலும் போகமும் மற்றவைகளும் மிகுதியாக கொடுத்தருளி தாங்கள் மட்டும் பன்றியின் தந்தமும் பாம்புகளும் எலும்புகளும் கோத்தணிந்த திருமேனியுடன் பார்ப்பவர்கள் பயந்து நடுங்கும்படியாக தோற்றமளிப்பதோடு கடலில் விசத்தையும் திருவமுது செய்தது எதனால்?

வேந்தர்கள் வேத்தியல் கண்டசோதி
மேதரு மானந்த ருத்திரேச
போந்தமு மோர்புலிக் குட்டிக்கம்மா
புவனங்கள் காக்குமொருத் தன்பாய
வீந்தனை நீதிகொ வன்னமாய
மெய்திட மின்மையா னன்றுகொன்னின்
காந்தொளி மேனியிற் பாதிவல்லே
கைக்கொண்டு விட்டனன் காசினிக்கே. (75)

இதன் பொருள்

மேன்மை பொருந்திய ஆனந்த ருத்திரேஸ்வரத்துள் வீற்றிருக்கும் பெருமானே. அரசர்களிடத்தில் நல்லாட்சி முறையை அமைத்த ஜோதி வடிவமானவனே. ஒரு புளிக்கிருப்புக்கு வயம்புறம்பு உங்களைக் காப்பாற்றுகின்ற சிங்கத்தை அளித்தாய். திருமால் இருக்குமிடம் இல்லாதிருக்கின்றான் என்றெண்ணி ஒளி பொருந்திய உன் திருமேனியில் இடபாதியை விரைந்து பற்றிக் கொண்டனன். இவ்வுலகத்தில் உம் நீதியின் சிறப்பு என்னே.

விசேடக் குறிப்பு

புலிமுலைப் புல்வாய் வாய்க்கு அருளினை.

காசினாக் கேற்றதொன் றன்று நின்றன்
கைத்தொழி லானந்த ருத்திரேசத்
தாசில ராகியெல் லோருமுய் யவல்கிய
வெம்பெரு மானதனைப்
பேசவல் கேட்டிநி னம்புவாயிற்
பெய்தனு தாங்கி வில்லுமேந்தித்
தேசொளித் தேரை யிவர்ந்தொடித்து
தேவர்கள் முன்னர்ச் சிரித்திறன்றே. (76)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேஸ்வரத்தின் ஒற்றயில்லாதவராகிய விளங்கி அனைவரும் கடைத்தேறும் பொருட்டு அருள் செய்யும் பெருமானே. தாங்கள் மேருமலையை வில்லாக ஏந்தி பூமியைத் தேராக அமைத்து அதன் மீது எழுந்தருளி திருமலை அம்பாக எடுத்துச் சென்று திரிபுரம் அழிக்கச் சென்றபோது ஒரு செயலும் செய்யாமல் தேவர்கள் முன்னிலையில் சிரித்துகொண்டு நின்றது இந்த உலகத்திற்கு ஏற்ற செயல் அன்று.

நின்றுமிருந் துங்கிடந்தும் போந்து
　றெக்கு வணங்கிநக் கேத்தெடுக்குந்
துன்றிய மெய்யடி யார்குழாத்துத்
　தொக்கு டனாய்விளை யாட்டயரு
நின்றரு ளானந்த ருத்திரேச
　நன்னிய ராதவன் பேதுமில்லேன்
முன்றலை தழைத்த வேபணியா
முன்வினை யென்வினை மோதுவாரே (77)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேஸ்வரத்தின் வீற்றிருக்கின்ற பெருமானே அடியார்கள் தங்கள்முன் நின்றும் உட்கார்ந்திருந்தும் படுத்திருந்தும் நடந்தும் வணங்கி தோத்திரத்து உம்மை அணுகுகின்ற மெய்யடியார்களுள் நடுவில் அவர்களோடு இணைந்து திருவிளையாடல் கொண்டருளும் பெருமானே நான் சிறிதும் அன்பு இல்லாதவனாய் இருக்கின்றேன். தங்கள் முன் என்தலை தாழ்த்தி பயனில்லை.

உம்மை நினைக்கவும் இல்லை. ஆகையால் நான் செய்த வினைதான் என்னை மோதித் தள்ளுகிறது.

மோது தரங்க மிரங்கு கங்கை

மெய்யொளி வேணி யமைத்த செந்தீப்

போதுறழ் கைத்தல மேந்தற் றும்பர்

பூமழை தூர்த்து வணங்கி தங்க

ஏதுகு மானந்த ருத்தி ரேசத்

தேவர் பிரான்கல யேந்தியைய

மாதரி டப்புகுங் காலை வேட்ட

வைப்பி டைமதித் தோவிளம்பாய் (78)

இதன் பொருள்

அலைகள் மோதும்படி இழிந்த கங்கையைத் தங்கள் ஒளிபொருந்திய சடையில் அமைத்து இடக்கையில் நெருப்பை ஏந்தி தேவர்கள் பூமழை பெய்து வணங்கி தோத்திரக்கும் ஆனந்த ருத்திரேஸ்வரத்தன் வீற்றிருக்கும் தேவர்கள் தலைவனே தாங்கள் பிரமகபாலத்தைக் கையிலேந்தி தாருகவன பெண்களிடம் சென்று பிச்சை கேட்ட போது அவர்கள் உம்முடைய நடத்தை விரும்பினார்களை கூறி அருள் வேண்டும்.

விளம்புவி தொண்டன தேதை நெஞ்சே

யெம்மையிற் கோட்டி குப்பி னைத்த

விளம்பிறை வேணி யன்மால் ரக்கற்

றன்ன நடந்த வேகம்ப வாணன்


பிரம்மா

வளம்படு. மானந்த ருத்தி ரேசன்
வந்தடி தாழுற் பொறுப்ப னென்று
விளம்படு தீவினை செய்ய றீர்ந்த
கைதையம் போதினைக் கண்டு கொள்ளே (79)

இதன் பொருள்

நெஞ்சே குருபகவானுக்குத் தவறு செய்த சந்திரனைச் சடையில் தாங்கியவனும் இராவணனுக்கு அருள் செய்தவனும் திருவேகம்பத்தில் வீற்றிருப்பவனும் வளமை மிகுந்த ஆனந்த ருத்திரேசத்தில் வீற்றிருப்பவனுமாகிய பெருமானிடத்தில் அணுகி அவன் திருவடிகளில் பணிந்தால் நாம் செய்த தீவினைகளெல்லாம் பொறுத்துக் கொள்வான் என்றெண்ணி பொய்சாட்சி சொல்லிய தாழம்பூ அடைந்த தீமையை எண்ணிப்பார் ஆகையால் உனக்கு சொல்ல வேண்டுவது ஒன்றுளது இறைவனிடத்தில் எப்பொழுதும் உண்மையைப் பேசவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்.

கொள்ளைக் குறையா வளத்தி னோங்கும்
கோலத் திருக்காஞ்சி வைப்பின் வைகு
மன்னெழி லானந்த ருத்தி ரேசத்
தடிகள் கழிய விழுந்த வெல்லை
தன்னலை யாளு சீர்த்தி யாருந்
தாழ்ந்தவென் னென்புனைந் தோளுமற்றும்
வின்னலை யாத லறிந்த னார்க்கு
மெய்ப்புக ழாக விளங்கிற் றன்றே. (80)

இதன் பொருள்

எடுக்க எடுக்க குறையாத நெளத்தினால் சிறப்பு பெற்றோங்கும் அழகிய திருகாஞ்சி மாநகரத்தில் வணங்கும் ஆனந்த ருத்திரேசத்தன் வீற்றிருக்கும் பெருமான் மிகுந்த அன்போடு பணியும் என்னை தள்ளிவிடாமல் சேர்த்துக் கொண்டது அவன் சிறப்பினை உணர்த்தும். அவன் திருமேனியால் எம்புகழும் தோலம் மற்றும் பல பொருளும் அவிந்திருப்பதை அறிந்து வணங்கும் உண்மை அடியார்களுக்கு அவன் திருமேனியில் உள்ளவை அவன் புகழை விளங்குவதாகவே காணப்படும்.

அன்றினான் வான்பரத் தாரழற் கோட்படா
தன்பி னான்றவர் மூவர் பிழைத்தமை
யின்றும் வையக மோதிடக் கேட்டுநீ
யேர்கொ ளானந்த ருத்திரே சத்தனை
நன்று மன்பின் வணங்கலை போற்றிலை
நாடி நண்ணிலை திண்ணிய நெஞ்சமே
யென்று நிற்புறத் தோதிலன் வல்வினைத்
துனைக்கு நேர்ந்த நெறிக்கணி யங்கவே (81)

இதன் பொருள்

வலிமையுடைய என் நெஞ்சமே முன்னொரு காலத்தில் ஆனந்த ருத்திரேசத்தன் இருக்கும் எம் பெருமான் முப்புரங்களைப் பிரித்து எரித்தபோது இறைவனிடத்தில் அன்பு மாறாதிருந்த மூவர் பிழைத்துள்ளதை இக்காலத்திலும் உலகத்தவர்கள் கூறுவதை நீ கேட்டதில்லையோ ஆதலால் இறைவன் எப்பொழுதும் நம்முடனே கலந்திருக்கின்றான். நீ உள்ளம்போடு இதுகாறும் வணங்கவில்லை

அவனை போற்றவும் அவனை மிகவும் விரைந்து நீ செல்ல வேண்டிய நன்னெறியிலே அவனை வணங்கி நடைபெறுவாயாக.

விசேடக் குறிப்பு

நின்னுடையவர் இச்சகர் எரிபுழைத்த
கண்ணுதல் எந்தை சடைத்தலைமுன் நிறைந்தபின்
எவ்வா. இந்திரன் எத்தனையோ பிரமர்கள்
மண்மிசை மாய்பவர் மாண்டனர் காண்தோளோக்கம்

இயங்கு முப்புர மெய்து பொடிப்படத்
மயக்க மின்றி யிருந்த புடையுற்
தயங்கு வெற்பு மயங்க வெளிக்கொளுந்
சதுர னாளந்த ருத்திரே சத்தவன்
புயங்கு வாவுவெண் வீற்றொளி கண்டவர்
போதற் தென்திசை யானுவருக் காண்பனே
வயங்கு மன்னவன் கச்சடை கண்டவர்
மறலி பாசம் விரிக்கப் பருவரோ. (82)

இதன் பொருள்

இயங்குதலின்றியும் பூமியும் மேருமலையும் இயங்கும் வகையில் எடுத்துச் சென்று முப்புரத்தைப் பிரத்தப் பொடியாக்கிய வல்லமை வாய்ந்த ஆனந்த ருத்திரேசன் பெருமான் தோள்களில் விளங்கும் திருநீற்றொளியைக் கண்டவர்கள்

தென்திசைக் காவலனாகிய இயமனன் வருத்தம் தோய்ந்த நிலையில் காணமாட்டான். அவ்விறைவனின் விளங்குகின்ற இறுக்கிக் கட்டப்பட்ட அடைகளைக் கண்டவர்கள் இயமனின் பாசத்தால் கட்டுப்பட மாட்டார்கள்.

விசேடக் குறிப்பு

உந்தியின் மேல் அசைத்த கச்சின்
அழகு கண்டால் பின்னை கண்கொண்டு காண்பதென்ன
(அப்பர் - கோயிற் திருப்பதிகம்)

பருவ தோன்றில்லை துன்பமல் லாலெடும்
பௌதி கத்திடைப் பண்பினைஞ் சேயது
விடுவ தேவிடுத் தாலெழில் காஞ்சியின்
மேவு மானந்த ருத்திரே சத்தனைத்
தொடுவ தாம்பய னெய்தறு மெய்துறிற்
சூழ்ந்த வல்வினை மூலம் வத்தொடுங்
கெடுவ தாமலை கெட்டிடி னெய்துமாற்
கேடி லாப்பர மானந்த வெள்ளமே (83)

இதன் பொருள்

என்பண்பு மிக நெஞ்சமே இவ்வுலகில் துன்பம் அல்லாமல் அநுபவிப்பது வேறொன்றுமில்லை, ஆதலால் துன்பங்களை விட்டொழிக்க வேண்டும். அழகிய காஞ்சியில் விரும்பி வீற்றிருக்கும் ஆனந்த ருத்திரேசுவர பெருமானை. நம்மை அடையும் பொருட்டு நீ அடைந்து வணங்க வேண்டும். அவ்வாறு அவனருள் நம்மை அடையுமானால் நம்மை சூழ்ந்தவர்களை ஆற்றல் மிக்க ஆணவம்

முதலாய மும்மலங்களும் அடங்கி கெட்டொழியும் அவ்வாறு மலங்களில் கேட்டைந்தால் நம்மிடம் அழிவில்லாததான பரமானந்த வெள்ளம் வந்தடையும்.

வெள்ளம் புத்த விரிசடைக் கற்றையும்
வெண்பொடி டித்திகழ் பாலமும் பாலத்தக்
கள்ளம் புத்த கதிர்க்கண் ணோக்கமுங்
கனித்த பேரருட் பார்வை முகங்களு
மள்ளெ யிற்கறைக் கண்டமு மாதடை
யாளம் வைத்த மருமக் குறிகளும்
வள்ள லானந்த ருத்திரே சத்தவன்
மலர்ப்ப தமும்வ யங்குவ வெங்குமே (84)

இதன் பொருள்

ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருக்கும் வள்ளலாகிய எம்பெருமான் திருச்சடையில் கங்கை பொதிந்திருக்கிறது. திருமேனியில் திருநீறு திகழ்கிறது. திருமேனியில் ஒளிவீசும் திருக்கண்களும் அவற்றில் வெளிப்படும் அருள் நிரம்பிய திருப்பார்வையும் கழுத்தில் ஆலகால விசமும் எம்பெருமாப்பு தழுவியதால் உண்டான வளைத்தரும் முலைத்தழும் புகரும் தாமரை போலும் திருவடிகளும் எல்லா இடங்களிலும் நிறைந்து இருக்கின்றன.

எங்கு நின்றல கோம்பு யிறைவன்

யென்ற யிர்க்குயி ராகிய வின்பனைப்

பொங்கு பேரரு ளல்கும் புராயனைப்

போகு கோட்டியில் வெள்விடைப் பாகனைக்

கங்கை வேணி தரித்த கடவுளைக்

காஞ்சியானந்த ருத்திரே சத்தனை

யங்கை யாமல கத்கனி போலவ

னருளி னாற்கண்டு கொண்டன மென்பவே (85)

இதன் பொருள் காஞ்சிமாநகரத்தில் ஆ

காஞ்சி மாநகரத்தில் ஆனந்த ருத்திரத்தில் வீற்றிருப்பவனே. எவ்விடத்தி லிருந்தும் உலக உயிர்களைக் காபாற்றுகின்ற இறைவனும் என் உயிருக்குள் உயிராக நின்று இன்பத்தைத் தருபவனும் பொங்கி வழியும் பேரருளை அளிக்கும் பரம்பொருளானவனும் விரைந்து செல்லும் வெள்ளிய இடையின் பாகனாக விளங்குபவனும் கங்கையைத் தம் சடையில் தரித்தக் கடவுளும் ஆகிய சிவபெருமானே அவன் அருளினால் அங்கையில் நெல்லிக்கனி போல் எளிமையாக நான் கண்டு கொண்டேன்.

விசேடக் குறிப்பு

"கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி

நனவிலும் நாயேர்க்கு அருளினை போற்றி"

- திருவாசகம் போற்றி - திரு அகவல்.

என்பு கண்டொறு மீறு நமக்குமவற்
 றெய்து மேயென வும்பர் கலங்குவார்
வன்பினார்ந்த கபாலங்கள் கண்டோறும்
 மாலும் வேதனும் மல்கை யேங்குவார்
முன்பன் னோர்கள் புகும்பொழு தையனே
 மூர் மாமணிப் பேரணி தோற்றிடாய்
தென்பிறங்கிய காஞ்சி வளம்பதி
 சிவனுறு மானந்த ருத்திரே சத்தனே. (86)

இதன் பொருள்

தென்றல் காற்று வீசும் வளப்புமிகுந்த காஞ்சி மாநகரித்தில் பொருந்தியுள்ள ஓனந்தருத்திரத்தள் அமர்ந்த பெருமானே. தங்கள் முன்பு தேவர்களைப் புகும் போது தங்கள் திருமேனியால் எம்புகளைக் காணும்போது நமக்கு இறுதிகாலம் வந்துவிடுமோ எனக் கலக்கம் அடைவார்கள் திருமாலும் பிரம்மாவும் தாங்கள் முன்வரும்போது வல்லமையால் தாங்கள் கையில் பெற்றுள்ள கபடத்தைப் பார்க்கும் போது அவர்க்கும் மனம் கலங்கிப் போகிறார்கள். ஐயனே! எனக்குப் பெருமைமிகுந்த அழகிய திருவுருவத்தைக் காட்சியாக தந்தருள வேண்டும்.

சிவனுறு மானந்த ருத்திரே சத்தனே
 தெய்வ வாணி நதிக்கரை வாசனே
யுவன ஒர்தி விழிக்குச் சலந்தர
 னுடலம் போழ்ந்த திகிரி யளித்தவா
கவன வாம்பா குக்கு மற்று நிற்
 காத லாற்றொழு வார்க்கருள் சின்றனை

பவன வேகமும் பிறப்பட் டேற்படு
  பாய்விடை வைத்த பஸ்பு தெரிக்கவே (87)

இதன் பொருள்
----------

ஆனந்தருத்திரேசத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானே. தெய்வதன்மை பொருந்திய வேகவதியாகிய வாணி நதிக்கரையில் வாசம் செய்பவனே. கருடன் மீது ஊர்ந்து செல்லும் திருமாலுக்குச் சலந்தரன் உடலை அரிந்த சக்கரத்தைக் கொடுத்து அருள் செய்வனே. வானவீதியில் செல்லும் குதிரையைச் சேரனுக்கும் யானையைச் சந்திரனுக்கும் அன்பு மீதூர்ந்து அவர்கள் தொழுதலால் அருள் செய்தவனே. காற்று வேகமும் பிறபடும் படியாக விடையின் மீது இவர்ந்து முற்பட வந்து எனக்கு அருள் செய்ய வேண்டுகிறேன்.

தெரிக்கு மாகம மாமறை யாதியுந்
  தெய்வ போக நுகர்ச்சி யொழுக்கமும்
பரிக்கும் பாச மிரிக்கு நெறிகளும்
  பன்ன வர்க்கதி காரத் தொடர்ச்சியும்
வரிக்கு மெய்ப்புகழ்க் காஞ்சி வளம்பதி
  மேவு மானந்த ருத்திரே சத்திறை
தரிக்கும் பேரரு ளாற்திரு மேனியைத்
  தாக்கி லானெனி லாம்வகை யில்லையே (88)

இதன் பொருள்
----------

உண்மையில் புகழ் நிரம்பிய வளப்பம் மிகுந்த காஞ்சியும் பகுதியில்

ஆனந்தருத்திர ரேசத்துள் வீற்றிருக்கும் எம்பெருமான் தம் அடியார்களுக்கு நான்கு வேதங்களும் ஆகாயங்களும் அறிந்து கொள்ளும் ஆற்றலையும் தேவலோகத்தில் இன்பம் அனுபவிக்கின்ற நிலையும் ஒழுக்கமும் பாதங்களிலிருந்து விடுபடும் நெறிகளும் இந்நாட்டை ஆளும் அதிகாரமும் கொடுத்தருள் செய்கின்றான். அவனது மிகுந்த அருளால் புகழுடைய உடம்பை அடையலாம் என்றால் அது முடியும் வேறு வகையில் அடைய முடியாது.

இல்லை யானமக் கென்று வெறுக்கை மிக்
 கெய்தி னார்களை யெண்ணி யிரங்கிநீ
யல்ல லுற்றனை யின்றனை நெஞ்சமே
 யவர்க ளோபண்டை நல்வினை யாற்றினார்
செல்ல லாம்வகை தீவினை முன்புநீ
 செய்தொ ழிந்தனை தெய்வதக் காஞ்சியின்
மல்ல லானந்த ருத்திரே சத்தனை
 வழுத்து மேலை வளத்தினை யாவையே. (89)

இதன் பொருள்

நெஞ்சமே இப்போது பெரும் செல்வம் எய்தி உள்ளவர்களைப் பார்த்து நீ ஏங்குகின்றாய் அவர்களோ முக்காலத்தில் நல்வினை செய்ததனால் இப்போது இதை அடைந்திருக்கிறார்கள். நாம் பெரும் செல்வம் அடையவில்லையே என்று ஏங்குகிறாய் நீ முக்காலத்தில் தீவினை செய்ததால் இப்போது துன்பத்தை அனுபவிக்கிறாய். தெய்வத்தன்மை பொருந்தி காஞ்சி மாநகரத்தில் வளப்பம் மிகுந்த ஆனந்த ருத்திரேசத்துள் வீற்றிருப்பவனை உளமாறப் போற்றி வணங்கினால் இரும் பிறவியால் எல்லா வளங்களையும் நீ அடைவாய்.

## சொல்லடைவு


அகந்தை - 1
அடியவர் - 23
அருத்தேன் - 38
அம்மா - 75, 30
அமலன் - 34, 47
அமிழ்து - 34, 44
அயலவர் - 37
அருவாய் - 34
அறக்கன் - 60
அறிவாய் - 32
அறுவதுசெய் - 45
அன்றினார் - 81
அன்னை - 10,22
ஆட்சி கொண்டருளானந்தன் - 29
ஆலம் பூத்தொளிர் - 25
ஆவியருள் - 51
ஆள்வது - 32
ஆனந்த விநாயகன் - 1
இறையோன் - 23
இளர்முடித்த - 16
இரவி - 11
இருள் - 44
இதலைமுவரி - 2
அடியார் - 10,30
அருக்குமலம் - 66
அல்லல் - 28
அம்மை - 7
இஅமலற் - 50
அழுத்தினான் - 59
அரிவைப்பொது மகள் - 2928
அருளினன் - 34
அறியாமை - 7
அறிவிரண்டு - 33,
அன்றதாய் - 36
அன்பு - 12, 32
ஆகமேத்தியவானந்தடரு - 30
ஆதியர் - 35
ஆவி - 32
ஆடட்டத்தீ - 44
ஆனந்த ருத்திரேசன்
இமையோர் - 10
இடும்பைநோய் - 39
இரங்கி - 32
இருட்புல் இஅருக்கும் - 41
இருள் - 34
இந்திரன் - 10

இம்மை - 7

இளம்பிறை - 79

இறுமுடல் - 45

இன்னல் - 19

உதவுநாதன் - 59

உபயம் - 28

உள்ளகம் - 28

உயர்ப்பியாது - 7

உறுநாள் - 45

உறுமலம் - 50

எண்டோளன் - 26

எம்பிரான் - 37

எழில் ஏகம்பம் - 56

ஏட்டை - 23

ஏர் - 55

ஐயனை - 53

ஒழிகாதல் - 49

கச்சுடை - 82

கடன் - 37

கடும்பசி - ற17

கண்டகலா - 5

கதுவற்று - 4

கமலபாதம் - 20

கரத்து - 62

கருணை - 17

கரும்பு - 17

இவரிமுகம் - 8

இளமதி - 42

இன்பத்துறை - 63

உடல்பொருள் - 2

உந்தி - 28

உபகாரம் - 45

உளபேதை - 36

உய்ந்தமல்லான் - 1

உறைவான் - 48

எங்ஙனம் - 27

எந்தாய் - 13

எரிவை - 2

ஏகம்பவாணன் - 56

ஏதம் - 15

ஏர்கொள் - 81

ஒட்டம் - 23

கச்சபேசம் - 56

கதுவாது - 42

கடலே - 63

கடைக்கண் - 10

கண்ணினை - 27

கபாலத்தான் - 53

கமலம் - 8

கரிசு - 29, 65

கருதாவினை - 67

கருற்று - 47

கல்லரத்தம் - 24
கவய நாறி - 11
கவற்றி - 43
கழிக்கழிகை - 39
கழுவாய் - 4
கன்மம் - 54
காசினி - 75
காடு 24
காமகோட்டம் - 58
காரைகாடு - 56
காவம் - 14
காவளர் - 71
காழ்வினை - 11
குலாக்குன்று - 25
குருமணி - 54
குருவை - 41
குலம் - 70
குழைக்கழல் -
குழாறிகள் - 30
குழநாள் - 9
கூத்தான் - 53
கைகா - 3
கொட்புறல் - 32
கொழுந்த - 36
கோட்டம் - 23
கேண் - 3
கோலநாள் - 5
கலன் - 78
கவர்பொருள் - 20
படிற்றான் - 67
கழிகாதல் - 48
களை - 40
காக்கும் - 39
காட்சி - 29
காப்பு - 17
காமப்பிழை - 17
காரோணம் - 56
காலன் - 61
காற்றொளிமேனி - 75
குடியேற்றி - 29
குமைத்தான் - 61
குருப்பிழை - 79
குரூஉ மணிதன் - 33
குவலயம் - 54
குழரீஸ் - 23
குறிகொள் - 33
கூட்டம் - 23
கூளம் - 56
கைதயம் - 79
கொடியிடை - 46
கொழுமணதன் - 66
கோட்பட்டாய் - 45
கோணை - 60
கோலம் புத்தொளிர் - 25

கோலம் - 47

சரியை - 43

சலம் - 36

சுடர் - 23

சிலைவன் - 9

சிறுவர் - 35

சுக்கிலம் - 3

செம்மன் - 7

செறிக்கும் - 33

சென்றடி - 35

சேதகப் பொருள் - 35

சேர்ந்தோங்கு - 3

சேற்றிடை - 6

சோதி - 10

தடங்கண் - 65

தந்தை - 1, 54

தரிக்கிலான் - 88

தனுக்களை - 18

தாசிலர் - 76

தாழ்வது - 11

திகிரி - 32

திண்டேர் - 11

திருநீற்றான் - 47

திருமான் - 10

திருவருள் - 43

தீர்த்திருமானந்தி - 23

தீவழி - 87

கோலமிடல் - 50

சலந்தான் - 87

சால - 52

சிந்தை - 25

சிவபுரம் - 39

சீசீறின் - 5

செஞ்சடை - 25, 27

செம்மை - 7

செறியொளி - 33

சென்னி - 60

சேயரி - 2

சேல்வழி - 72

சூலம் - 60

ஞாட்பக்கை - 57

தத்துவன் - 54

தமியேன் - 40

தளையவிழ்பு - 40

தாண்ட - 20

தாய் - 54, 69

தாளிணை - 40

தின்கொடி -

திருக்கோட்டி - 28

திருப்புகழ் - 6

திருவருட்டிற ம்

திளைபெருங்கருணை - 40

தீர்வு - 37

தீவினை - 7, 52, 79

துகில் - 35
துறவனந்த - 9
தொண்டல்கு - 4
தொல்வுலகத்தவர் - 74
தேரானந்தவெருகொளி - 29
தொல்லை - 4
நகை - 38, 61
நஞ்சு - 74
நலத்தகை - 52
நல்லானந்தம் - 5
நன்றருள் - 77
நால்வர் - 50
நான்மறை - 63
நின்மலர் - 36
நிறை - 27
நீர் - 16
நீலம்பூத்தொளிர் - 25
நெஞ்சகம் - 5.7
நெருப்பு - 16,62
நுதற்கண் - 62
பசுபதி - 67
பனகடப்பா - 57
பதியேன் - 48
பயிற்றின் - 35
பாசன் - 30
பரல் - 47
பலவாய் - 36
துறக்கம் - 32
துறவோர் - 46
தெய்வச்சூழல் - 73
தேசொளித்தேரை - 76
தேவர்தேன் - 52
தொழுதேத்தும் - 22
நஞ்சனை - 5
நந்தவனம் - 31
நல்வினை - 6
நறுங்களங்கம் - 24
நாட்டம் - 23
நாற்றவுடல் - 5
நிகர் - 26
நிலவு - 25
நிறையோன் - 26
நீரானி - 15
நீதி - 3
நெஞ்சம் - 27
நெற்றிக்கண் - 81
நூலெழுத்த - 50
பண்ணை - 35
பண்பு - 12
பந்திவிட்டிரை - 60
பசிறில் - 65
பரம்பானை - 52
பல்கி - 12
பவமறை - 44

பொன்னிமை - 56

பொன்னவளு - 71

போகபூமி - 31

பேதை - 3

பேரின்பதடம் -

பைந்தோல் - 80

பையரவப்பூணினான் - 53

மஞ்சனை - 5

மச்சை - 3

மடமை - 51

மண்டூகம் - 8

மணிக்குன்று - 64

மணிக்குறங்கி - 13

மயானத்துமணி 56

மருமக்குறி - 84

மலக்கோட்டம் - 22

மலமாயை - 54

மலர்த்தடம் - 2

மகிழ்ந்த - 25

மறலிபாசம் - 82

மழவெள்ளேற்றான் - 53

மளிப்புனைனான் - 21

மனம் - 23

மாகனான் - 38

பொன்னுருவான் - 13

போகத்துறங்கு - 35

போகம் - 30

பேரறிவு - 33

பைங்கட் - 53

மைம்பூண் - 8

பௌதிகம் - 83

மஞ்சிறை - 5

மடநெஞ்சே - 21

மடவார் - 70

மணி - 5

மணிகண்டன் - 30

மணித்தேரான் - 50

மரர்கள் - 46

மல்லுக்கய 24

மலர்ப்பொழில் - 31

மலமறுத்தாங்கு - 59

மல்லவி - 58

மற்றெழில் - 84

மறைமுழக்கறா - 27

மழை - 31

மன்றல் -

மனமாதி - 57

மாட்சி - 29

மாண்டது - 20

மாதர் - 3

மாப்பிடை - 8

மாமன்ற - 88

மாயாவுருவம் - 69

மாலத்தன் - 47

மாதுங்கமலனும் - 14

மாவடி - 57

மின்னிவேணிடை - 22

முக்கண்வள்ளல் - 58

முகபபோத -

முடைமேனி - 48

முண்டகன் - 10

முதுமனை - 43

முலையல்லான் - 3

முறிமேனி - 48

முன்னவன் - 54

மூலமலம் - 43

மூதுராணத்த - 12

மூழ்க - 2

மெல்லுவல் - 2

மெய்ப்புகழ் - 90

மெல்ல் - 5

யன்மயோனசிய - 57

யந்திலமிழ் 1

யாக்கை - 19

யேகமாய் - 30

மாணக்கம் - 57

மாதரார் - 55

மாமலரான் - 21

மாய்வன - 42

மார்பன் - 9

மாலாக்கை - 60

மாலை - 17, 24

மிடற்றான் - 47

முக்கட்கரும்பு - 72

முகவன் - 71

முகைக்குஞ்சோலை - 62

முண்டகம் - 1Ø28

முத்திமை - 1

முப்புரம் - 9, 82

முனைத்தமர் - 72

முன்றலை - 77

முனிந்து - 1

மூத்திரம் - 3

மூவர் - 34

மூலிவது - 73

மெய்ப்பொருள் - 24

மெய்ம்மை - 79

மைந்தன் - 1

மையெழுதி - 55

யல்லவிற்று - 89

யாத்தனன் - 29

வகைமொழி - 23

வடம்புட்டி - 55

வதனநகை - 3

வயமை - 9

வரங்கள் - 40

வளம்பதி - 86

வளராநிற்ப - 68

வன்றிசை - 27

வாட்கண் - 3

வான்பருபொழில் - 14

வாயுருவி - 36

வால் - 50

வாளிரவி - 60

விசிற்கிழவன் - 60

விடங்கன்றன்

விடமிடற்றடக்கு - 38

விண்டு - 4

விண்ணாள்வர் - 72

விணர்பொழில் -

விரிபுகழ்ப்பதம் - 28

வில்லமேந்தா - 76

வில்லழுத்தி - 24

விழிமடவார் - 5

விள்ளலை - 80

விளைமதுபொழில் - 40

வன்காஞ்சி - 1, 36

வயக்குதி - 14

வயின்வயின - 11

வலக்கரம் - 50

வளம்சிறந்த - 31

வனந்தொறும் - 67

வாகுவி - 9

வானநதி - 87

வாயவாய - 39

வார்ந்தகடை - 72

வாழ்வு - 4, 10

வானமிழ்து - 5

விசும்பு - 61

விட்புடை - 29

விடை - 4

விண்ணவர் - 22, 30, 51

விண்ணொளி - 41

விம்முவன் - 12

விருப்பு - 3

விழுங்கப்பட்டொ - 34

விரிகவிழ்த்த - 51

விழியுமை - 25

விளமரம் பொழில் - 68

விளா செலம்பு - 9

விளை - 31

விளைவளமீட்டு - 32

வெவ்வீறு - 72

வெண்பூதி - 24

வெண்பொடி - 84

வேதியன் - 54

வெருவுவல் - 39

வெள்விடை - 35

வெற்கதிர் - 8

வேத்தியல் - 75

வேந்தர்கள் - 75

வைகல் - 32

வைகுவன் -

வீட்டிடை - 30

வீழல் - 45

வெண்பொடி -

வெண்மதி - 58

வெங்கீற்றொளி - 82

வெரீஇயினர் - 50

வெருவு - 51

வெள்ளம் - 27

வேஷ்யாநந்தம் - 16

வேதனை - 37

வேயினதோள் - 54

வைகுந்தம் - 71

வையகம் - 13, 81.

# துணை நூற் பட்டியல்

## துணை நூற் பட்டியல்

காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் ஓர் ஆய்வு, க. ரத்தினம், பிஎச்.டி பட்ட ஆய்வேடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1986

சுவடியியல் ஓர் ஆய்வு, பு. சுப்பிரமணியம், பிஎச்.டி., பட்ட ஆய்வேடு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985

பரத்தையர் மாலை, பதிப்பாய்வேடு, சி. காந்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

நூல்கள்

அந்தாதி இலக்கியங்கள், பி. கவிய பெருமாள்,

அருணாசலப் புராணம்

ஆனந்த ருத்திரேஸ்வரர் வண்டு விடு தூது, கச்சியப்ப முனிவர்,

ஆனந்தருத்திரேஸ்வரர் பதிகம் - சிவஞான முனிவர்,

இலக்கணத் தொகை- யாப்பு-பாட்டியல், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

கந்தபுராணம் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், ஆறுமுக நாவலர் (பதி.) எட்டாம் பதிப்பு, சென்னை, 1952

கலை களஞ்சியம், செ.சி.நூ.பதி. கழகம், சென்னை, 1969

கழக தமிழ் அகராதி, கழக புலவர் குழு, சை.சி.நூ. கழகம், சென்னை

காஞ்சிபுராணம் சிவஞான முனிவர், தமிழ் அச்சகம், திருமேற்றளி படலம், 1964

சிவஞான போதம் மூலமும் உரையும், ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் அ அண்ணாமலை பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றது, சிதம்பரம், 1964

சிவபராக்கிரமம்

சிற்றிலக்கிய சிந்தனைகள், கு. முத்துராசன்,

சிற்றிலக்கிய சொற்பொழிவு, ஐந்தாவது மாநாடு கழக வெளியீடு

சிற்றிலக்கிய செல்வம், பி கனிபெருமாள்,

சிற்றிலக்கிய திறனாய்வு,

செந்தமிழ்ச் செல்வி, சிவஞான முனிவர், 1902

தண்டியலங்காரம், சுப்பிரமணிய தேசிகர் உரை, சை.சி.நூ. கழகம், சென்னை, 1977

தமிழ் இலக்கிய வரலாறு, சி. பாலசுப்பிரமணியம், —

தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசனார் —

தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1984

தமிழக மக்களும் வரலாறும் பண்பாடும், கே.கே. பிள்ளை, த.நா.பா. நிறுவனம், தமிழ்நாடு,

திருக்குறள் பரிமேலழகர் உரை, நுண்பொருள் மாலை, இ. சுந்தரமூர்த்தி, தென்மொழி நூலகம், சென்னை, 1948

திருப்புகழ், அருணகிரிநாதர், சை.சி.நூ. கழகம், சென்னை, 1964

திருவாசகம், எஸ். இராஜம், வெளியீடு, சென்னை, 1956

திருவிளையாடற் புராணம், உ.வே. சாமிநாதையர், கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1927

தேவாரம், ஞானசம்பந்தர், மோபாலயியர் (பதி.) புதுவை பிரஞ்ச நிறுவனம், பாண்டிச்சேரி, 1984

தேவாரம், ஏழாம் திருமுறை, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்தது திரு. கி.வா. ஜகந்நாதன், கலைமகள் ஆசிரியர், சென்னை, 1982

தேவாங்க புராணம், மாம்பலக்கவிச் சிங்க நாவலர், ஒன்னைய கவுடர் (பதி. செசென்னை

தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சினார்க்கினியர்), எஸ். கனகசபாபதி பிள்ளை (பதி.) சென்னை, 1934

பிங்கல நிகண்டு, பிங்கல முனிவர்.

பொரிய புராணம், சை.சி.நூ. கழகம், சென்னை, 1968

ஸ்ரீகாளத்தி புராணம், வே. சாமிநாதையர், வைஜயந்தி அச்சுக் கூடம், சென்னை, 1912